நன்றி - நூலகத்திட்டம்


# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இதழ் 17 ஜூன் / ஜூலை 1992 விலை - 5/-


## தெரிவுக்குழு ஒரு பம்மாத்து;

# அரசு முழுத் தமிழ் மக்களையும் முட்டாள்களாக்குகின்றது

## - குமார்

நாங்கள் தனிநாடு கேட்டபோது அது நியாயம் அற்றது, இணைப்புக் கேட்கிற போது அதுவும் நியாயம் அற்றது. இப்படியே கீழே கீழேயெல்லாம் கேட்டுக் கொண்டு வந்து கிராம சபை கேட்கிற போது அதுவும் நியாயமற்றது எனச் சொல்லி எங்களுக்கு உதைப்பதற்கு தயாராவார்கள்.

எனவே இந்த நான்கு அம்சத் திட்டம்தான் எமது குறைந்த பட்ச கோரிக்கை இ.தொ.கா. வும் இதில் சேர்ந்து கொண்டது எமக்கொரு பெரிய பலம். இதனையே நாம் தெரிவுக்குழு முன் வைத்துள்ளோம். எனினும் தெரிவுக் குழுவிலும்கூட ஒன்றும் நடைபெறாது என்றுதான் நான் கருதுகிறேன். தெரிவுக்குழு ஒரு பம்மாத்து. அது முழுத்தமிழினத்தினையும் முட்டாளாக்கிறது என்கிறார் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம். இவரது பேட்டி முழுமையாக பக்கம் 7 இல் தரப்படுகிறது.




## யாழ் குடா சுற்றிவளைப்பு

# முடிந்தால் கைது செய்ய அரசுக்குச் சவால்!

## - உடுகம்பொல

முன்னாள் பிரதி பொலிஸ் மாஅதிபர் பிரேமதாச உடுகம்பொல நமது சகோதரப்பத்திரிகையான 'யுக்திய'வுக்கு அளித்தவிஷேட பேட்டி அடுத்த இதழில்:



யாழ் குடாநாட்டைக் கைப்பற்றுவதற்கான முயற்சியில் ஜூன் 28ந் திகதி முதல் ஒப்பரேசன் பலவேகய - 2 இராணுவ நடவடிக்கையில் படையினர் இறங்கியுள்ளனர்.

இந்நடவடிக்கைக்கென இரண்டு பிரிகேட் படையினர் (ஒரு பிரிகேட் = 3000 பேர்) வெற்றிலைக் கேணியில் இறக்கப்பட்டனர். கடந்த முறை ஆனையிறவு முகாம் மீதான புலிகளின் தாக்குதலின் போதும், அதனை முறியடிக்குமுகமாக படையினர் வெற்றிலைக்கேணியிலேயே இறக்கப்பட்டு ஆனையிறவை நோக்கி நகர்த்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

### யாழ் குடாவுக்கான தொடர்புகள் துண்டிப்பு

வெற்றிலைக் கேணியில் இறக்கப்பட்ட படைகள் முள்ளியான், புல்லாவெளி,

பார்க்க பக்கம் 12




## இலங்கை இருள்

இது நம்பிக்கைகள் தகரும் காலகட்டம்.

கடந்த நாற்பது வருடங்களுக்கு மேலான இலங்கை அரசியல் வரலாற்றை மேலெழுந்த வாரியாகப் பார்ப்பவர்களுக்குக் கூடத் தெரிவது எந்த இலங்கை அரசாவது சிறுபான்மைத் தேசிய இனங்களின் அரசியலுரிமைகளை மதித்தது கிடையாதென்பது. குப்பைத்தொட்டிக்குள் போடப்பட்ட ஒப்பந்தங்கள் அனந்தம். இந்த வரிசையில் பாராளுமன்றத் தெரிவுக் குழுவும் பாடையில் ஏறப் போகின்றது என்பது மிகத் தெளிவாக இப்போது தெரிந்துவிட்டது. எங்களைப் பொறுத்தவரை இது ஆச்சரியம் தரும் ஒன்றல்ல.

வரலாற்றின் தர்க்கவியலும், தவிக்கமுடியாத இயலும் இலங்கையின் இனத்துவப் பிரச்சினையின் தீர்வு இலங்கையின் அரசுகளின் விருப்புக்கும் கடப்பாட்டிற்கும் அப்பாற்பட்டது என்பதைத் தெளிவாகவே சுட்டிக் காட்டுகின்றன. பிரேமதாச அரசிலும் பிரேமதாசாவின் தலைமைத்துவத்திலும் நம்பிக்கை வைத்துச் செயற்பட்ட / செயற்படுகின்ற தமிழ் அரசியல் கட்சிகளுக்கும் குழுக்களுக்கும் தான் இது நம்பிக்கைகள் தகரும் காலகட்டம். இப்போது முகமூடிகள் விலகத் தொடங்கிவிட்டன; புன்சிரிப்பின் பின்னால் இருப்பது 'பச்சை'ப்பயங்கரவாதமே தவிர வேறொன்றுமல்ல.

துரதிர்ஷ்ட வசமாக 'வீரமும் களத்தே விட்டு வெறுங்கை'யைப் பிசைந்து கொண்டிருக்கும் இலங்கை எதிர்க் கட்சிகளும் ஏட்டிக்குப் போட்டியாக தமிழர் எதிர்ப்பு; பேரினவாதம், மலையக மக்கள் எதிர்ப்பு, தொண்டமான் எதிர்ப்பு என்று தம்பங்குக்கு நெருப்பில் நெய் வார்க்கிறார்கள். முடிவற்ற யுத்தம்தான் யதார்த்தம் என்று தெரிகின்றது. ஆங்காங்கே ஒளிவிடும் உதிரி உதிரியான நம்பிக்கைச் சுடர்களுக்கு நெருக்கடி மிக்க காலம் தொடரப்போகிறது.

இருளை மீற இன்னும் எத்தனை அடிகள்??

## குளத்தங்கரையாம்; கோயிலாம்! கோயிலுக்குப் பக்கத்தில் ஹோட்டலாம்!

அதென்ன திடீரென்று கொழும்புப் பத்திரிகைகளுக்கும் எதிர்க்கட்சிகளுக்கும் கந்தளம எனும் இடத்தில் உல்லாசப் பயணிகளுக்கான ஹோட்டல் ஒன்று அமைக்கப்படுவது மா-மாபெரும் விஷயமாகப் போய் விட்டது?

சிங்கள பௌத்த கலாசாரமும் சிங்களத் தேசிய இனமும் இந்த ஹோட்டல் அமைக்கப்பட்டு விட்டால் கல்லறைக்குப் போய்விடும் என்ற மாதிரி 'லபோ! லபோ!' என்று ஓலமிடுகிறார்கள்.

இதோ மாதிரிக்குச் சில முத்துக்கள் :

'இந்த ஹோட்டல் திட்டத்திற்கு நாங்கள் முழு எதிரிகள், ஏனெனில் புத்த சாசனத்தையும் சிங்கள மக்களின் வாவிக் கலாசாரத்தையும் (Tank Culture) மிக மோசமாக இது பாதிக்கப் போகிறது.'

சொல்பவர் : அநுர பண்டாரநாயக்க.

'சிங்கள மக்களையும் அவர்களுடைய கலாசாரத்தையும் அழிக்கத் தொண்டமான் செய்யும் சதி இது!'

சொல்வது : திவயின பத்திரிகை.

திறந்த பொருளாதாரம், உல்லாசப் பயணிகளுக்கு எல்லாவற்றையும் திறந்து விடுவது, சுற்றுச் சூழல் பற்றிய அக்கறையின்மை என்ற அடிப்படையில் புத்தி பூர்வமாக அரசை விமர்சனம் செய்வது என்பது வேறு; சாத்தியமான எல்லா விஷயங்களையும் எடுத்து அதற்கு இனவாத மூலாம் பூசி அரசை எதிர்த்து அதன் மூலம் தாமே மேலான சிங்கள பௌத்த விசுவாசிகள் என்று நாடகமாடுவது வேறு!

கந்தளம ஹோட்டல் விஷயத்தில் மட்டுமல்ல எல்லா விஷயங்களிலும் எல்லாக் காலங்களிலும் இலங்கையின் பிரதானமான எதிர்க் கட்சிகள் (அவை எந்தக் கட்சியாயினும் சரி) சிங்கள - பௌத்த இனவாதத்தை முன்வைத்தே பிழைப்பை நடாத்தி வந்துள்ளன.

தொண்டமான் அவர்கள் சுற்றுலாத் துறை அமைச்சராக இருப்பதும் கந்தளம ஹோட்டல் திட்டத்திற்கு அவருடைய அமைச்சே பொறுப்பாக இருப்பதும் சும்மா வாயை மென்று கொண்டிருந்தவர்களுக்கு அவல் கிடைத்தது போலாயிற்று.

தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களுமல்ல பாவம்! சிங்கள மக்களும் தான்!!

**ஒரு குறிப்பு** : சரிநிகரை வெளியிட அரசு நிதி வழங்குகிறது என வடக்கில் புரளி கிளப்பி விடப்பட்டுள்ளதாக அறியக் கிடைத்தது. மறு புறத்தில் இங்கோ சரிநிகர் புலிகளின் வால் என்கிற வதந்தி. இது வரையான சரிநிகர் இதழ்களைத் தொடர்ந்து வாசித்து வரும் வாசகர்களுக்குப் புரியும். குறித்தவொரு நிலைப்பாட்டுடன் அது வெளிவருகிறது என்பதும், அது புலியின் வாலோ. சிங்கத்தின் தலையோ அல்ல என்பதும்.

நன்றி - நூலகத்திட்டம்



அற்பனுக்கு பவுசு வந்தால் அர்த்த ராத்திரியில் குடை பிடிப்பான்" என்று சொல்வார்கள். தமிழ் நாட்டில் ஜெயலலிதாவுக்கு வந்த பவுசு அர்த்த ராத்திரியில் குடைபிடிப்பதற்கும் மேலே போய் விட்டது.

சட்டசபை அம்மையார் பத்திரகாளியாகி காட்சி தரும் மண்டபமாகிவிட்டது. எம். எல். ஏக்கள் அம்மையாரின் கால் கழுவிய நீரைப் புண்ணிய தீர்த்தமாக கூறிப் பருகுகின்ற லட்சணத்தில் இருக்கிறார்கள்.



நன்றி: கேடயம்

# பத்தினித் தெய்வமோ?

வானளாவிய அதிகாரம் படைத்த "சபாநாயகர்" கூட ஜெயலலிதா சபைக்கு வரும் போது எழுந்து விடுகிறார் – தம்மையறியாமலேயே.

ஜெயலலிதா போகுமிடமெல்லாம் வானுயர்ந்த "கட்அவுட்"டுகள் நிறுத்தப்படுகின்றன. பூக்களினால் போடப்பட்ட கிட்டத்தட்ட இரண்டு மூன்று அங்குல தடிப்புள்ள நடைபாதை நிலபாவாடை மேல் தான் அவர் நடந்து போகிறார். சட்டசபையில் இருக்கும் உறுப்பினர்கள் ஜெயலலிதாவின் முகத்தைப் பார்த்தால் நாத் தடதடக்க பேச்செழாது வாய் மூடிவிடுகின்றனர். நம் நாட்டு ஏ.ஜே. ரணசிங்காவை விட கேவலமான முறையில் ஜெயா அம்மையார் போட்ட பிச்சையே இந்தப் பதவி என்று பகிரங்கமாக அறிவிக்கின்றனர். மேடைகளில் அவர் வீற்றிருக்கவென விஷேடமான கதிரைகள் தருவிக்கப்படுகின்றன.

ஜெயலலிதாவின் நல்வாழ்வுக்காக ஆலயங்களில் பிரார்த்தனை செய்யப்படுகின்றது.

எமது ஜனாதிபதி பிரேமதாச அவரது மலினத்துவ (Populist) அரசியலைக் கற்றுக் கொண்டது எம்ஜியாரிடம் இருந்து என்று சொல்லுவார்கள்.

ஆனால் எம்.ஜியாரையும் மிஞ்சி விட்ட, எமது ஜனாதிபதியே பிச்சை வாங்கவேண்டியளவு சிறப்பு ஜெயலலிதாவுக்கு இருக்கிறது.

கண்ணகிக்குப் பிறகு வந்த பத்தினித் தெய்வமாக அவர் உயர்த்தி வைக்கப்பட்டுள்ளார்.

எதிர்க்கட்சி என்று யாருமே இல்லாத ஒரு பலத்துடன் (பெயருக்கு அங்கு 7 பேர் இருக்கிறார்கள்) ஆட்சிக்கு வந்துள்ள அம்மையாரின் அரசு தற்போது தீவிரமாக இறங்கியுள்ள பணிகள் மூன்று.

ஒன்று, சட்டசபைக்கு உள்ளேயும் வெளியேயும் எதிர்கட்சிகளையே இல்லாமல் செய்வது.

இரண்டு, பத்திரிகைகளை இன்றைய யாழ்பாணத்துப் பத்திரிகைகள் போல மட்டுமே வர வேண்டும் என்று உத்தரவிடுவது.

மூன்று, தமிழீழ விடுதலைப் புலிகளே ராஜீவைக் கொன்றவர்கள் என்று கூறி இலங்கைத் தமிழர்கள் அனைவரையும் நாடு கடத்துவது.

இந்த நோக்கங்களை நிறைவேற்றத் தனது அரசியல் கட்சியின் தொண்டரடிப் பொடிகள், பொலிஸ் படையினர் அனைவரும் மெய்வருத்தம் பாராது கண்தூங்காது உழைக்க வேண்டுமென அவர் உத்தரவிட்டுள்ளார்.

பத்திரிகையாளர்கள் கழுத்தில் கத்தி வைக்காத குறை. "இலஸ்ரேட்டட் வீக்லி" பத்திரிகையின் முன்னாள் சென்னை நிருபர் கே. பி. சுனில், முரசொலி ஆசிரியர் எஸ். செல்வம், கோவை மாலை முரசு ஆசிரியர் எஸ். கே. ஐ. சுந்தர் ஆகியோரைக் கைது செய்யுமாறு தமிழக சட்டசபை சபாநாயகர் முத்தையா அவர்களால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. நக்கீரன் பத்திரிகையின் ஆயிரக்கணக்கான பிரதிகள் அ.தி.மு.க தொண்டர்களால் தீயிட்டுக் கொழுத்தப்பட்டன.

புதிய ஜனநாயகம், - புதிய கலாச்சாரம் பத்திரிகைகளைச் சேர்ந்தவர்கள் பொய்வழக்கு சோடிக்கப்பட்டு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சட்டசபையில் போய் மன்னிப்பு கேட்க வேண்டிய அவசியமில்லை என சுப்ரீம் கோர்ட் சுனிலுக்கு அளித்த பாதுகாப்பை அலட்சியம் செய்ய முடியும் என்றும், சட்டசபை மக்களின் பிரதிநிதிகளது சபை என்பதால் சுப்ரீம் கோட்டை விட உயர்ந்த அதிகாரம் படைத்தது என்றும் ஜெயலலிதா கோஷ்டியினர் வாதிக்கின்றனர்.

ஆனால் சட்டசபையில் நடக்கின்ற சம்பவங்களைப் பார்த்தால் அது ஒரு மலிவு விலைச் சாராயக் கடையை விட மோசமான முறையில் நடக்கிறது தெரியவரும். கருணாநிதிக் காலத்திலும் சரி, இன்றைய ஜெயலலிதா காலத்திலும் சரி சட்டசபையில் கேவலமான வார்த்தைப் பிரயோகங்களைப் பாவித்து, அடிதடி, வேட்டி, சேலை உரிதல் என்று இன்னோரன்ன நடவடிக்கைகளை தொடரும் உறுப்பினர்கள் தங்களை உயர்ந்த ஸ்தானத்தில் இருப்பதாக சொல்லிக் கொள்வது வேடிக்கைதான்.

சட்டசபை உறுப்பினர்களை "பறையா" என்று சாதிப்பேரால் இழிவாகக் கூறுவதற்கு கூட வெட்கப்படாதது தான் தமிழக சட்டசபை என்றால் அதன் ஸ்தானம் பற்றிச் சொல்லத் தேவையில்லை (சிறிலங்கா சுதந்திரக்கட்சி பா.உ. நிமால் சிறிபால டீ சில்வா தமிழ் நாட்டு சட்டசபையிடம் "ரியூசன்" பெற்றுக் கொண்டாரோ?

ஜெயலலிதாவின் தற்போதைய தடா (T.A.D.A) சட்டம் கேள்வி முறையின்றிப் பத்திரிகைகளையும் பத்திரிகையாளர்களையும் ஒடுக்க வாய்ப்பளிக்கின்றது. எத்தகையதொரு விமர்சனமும் தன்மீது எழக்கூடாது என்பதில் ஜெயலலிதா தீவிர கவனம் செலுத்தி வருகிறார். அவரது தொண்டர்கள் இதை வெட்டிவா என்றுறைத்தால் கட்டி வந்து காலடியில் சமர்ப்பிக்க ஆயுதசன்னதத்தராய் தயாராக இருக்கிறார்கள். ஒன்றில் பத்திரிகைகள் தடை செய்யப்படுகின்றன அல்லது பத்திரிகை ஆசிரியர்கள் வேறேதாவது குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்படுகிறார்கள். பத்திரிகைகளில் எழுதப்படும் தொடர் கட்டுரைகள் நிறுத்தப்படுகின்றன. எழுதுபவர்கள் அம்மையாரின் அல்லது அவரின் "கட்டவுட்"டினது காலில் விழுந்து மன்னிப்பு கோராத பட்சத்தில் எழுத்துரிமை பறிக்கப்படுகிறது மட்டுமல்ல கட்சியில் இருந்து கல்தாவும் வழங்கப்படுகிறது.

அம்மையாரின் முகத்தில் ஓடுகிற ரேகைகளைப் பார்த்தபடியே தமிழ் நாட்டில் அரசியல் நடாத்தும் காங்கிரஸ் கட்சி, தனது கட்சியிலிருந்து ஆட்களை வெளியேற்றுவதற்கான பணிப்புரையை இப்போது அம்மையாரிடமிருந்து தான் பெறுகிறதாம் (பாவம் ராவோ)

இந்த லட்சணத்தில் அம்மையாருக்கு " சிறந்த பெண்மணி" என்று வேறு அரசியல்வாதிகளால் மகுடம் சூட்டப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டு பத்திரிகையாளர்கள் பிழைப்பு நடாத்துவதற்காக எழுதுகிற போக்கைக் கொண்டிருக்கும் வரை அம்மையாருக்கு அசைவில்லை, அவரது நடவடிக்கைகளுக்கும் கேள்வி முறை இல்லை. "இதயம்" பத்திகையில் வந்த ஒரு வரி இதற்கு நல்ல சாட்சி "தங்கள் அரசியல் செல்வாக்கை காப்பாற்றிக் கொள்ள சில தலைவர்கள் எந்த நிலைக்கும் இறங்கத் தயாராக இருக்கும் போது, தேச நலன் பொருட்டு தன் சொந்த வாழ்க்கையைப் பற்றிக்கூட கவலைப்படாமல் போராடத் தயாராக இருக்கும் முதல்வரின் மன உறுதியைப் பாராட்டலாம்."



நன்றி: புதிய ஜனநாயகம்

பத்திரகாளியோ?



சரிநிகர் மாதம் ஒரு முறை இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தின் சார்பில் (MIRJE) வெளியிடபபடும் இதழாகும். கருத்துச் சுதந்திரமும், பத்திரிகை சுதந்திரமும் பேணப்படுவதற்காகவும் இனத்துவ சமத்துவத்திற்காகவும் சரிநிகர் பாடுபடும். சரிநிகரில் வெளியாகும் எல்லாக் கருத்துக்களும் ஆசிரியருடையதோ அல்லது இனங்களுக்கிடையே நீதிக்கும் சமதத்துவத்துக்குமான இயக்கத்தினதோ கருத்துக்களாக அமைய வேண்டுமென்ற கட்டாயமில்லை. பத்திரிகா நாகரிகத்தையும் தர்மத்தையும் பேணியமைந்த எவ்வகையான மாற்றுக் கருத்துக்கலையும் சரிநிகர் பிரசுரிக்கும்.

எல்லாத் தொடர்புகளுக்கும்:

ஆசிரியர்
'சரிநிகர்'
6, அலோசாலை,
கொழும்பு – 3.

சந்தா:
ஒருவருடம் :
உள்நாடு: 60/-
வெளிநாடு: 15 US $

சந்தாவை காசுக்கட்டளை/ தபாற்கட்டளை/ காசோலை மூலமாக MIRJE என்ற பெயருக்கு எடுத்து அனுப்பி வையுங்கள்.

நன்றி - நூலகத்திட்டம்

# சிங்களப் பேரினவாதமும் ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியும்



“சிங்களம் மட்டும்” சட்டத்தின் பிதாமகரான சொலமன் றிட்ஜ்வே டயஸ் பண்டாரநாயக்கா தன்னுடைய கல்லறைக்குள் சந்தோஷமாகப் புரண்டுகொண்டிருக்கிறார். ஏனென்றால் அவருடைய வாரிசுகளும் அருமை வாழ்க்கைத் துணைவியும் அவருடைய சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் அவரைவிட இனவாதிகளாகச் சீர் குலைந்துள்ளனர்.

பாராளுமன்றத் தெரிவுக்குழு, இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு-காணல் தொடர்பான சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கபடத்தனமும் இனவாத நிலைப்பாடும் நாம் அனைவரும் அறிந்த ஒன்று. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் இந்தக் “கல்யாண குணாம்சங்கள்” அண்மையில் வெளிப்படுகிற முறைகளைப் பார்க்கிறபோது இவர்கள் தப்பித் தவறி ஆட்சிக்கு வந்தால் தமிழர்களையும் முஸ்லிம்களையும் ஒவ்வொருவராகத் தின்று தீர்த்துவிடுவார்கள் என்று துலாம்பரமாகத் தெரிகிறது.

இந்த வருட மே தினத்து ஊர்வலங்களில் சி.சு. கட்சி தலைமையிலான எதிர்க் கட்சிகளின் கூட்டணி நடாத்திய ஊர்வலமும் பெருங்கூட்டமும் மிகப் பிரமாண்டமாக இருந்தது. ஆளுங்கட்சியினதும் குறிப்பாக ஜனாதிபதி பிரேமதாசாவினதும் செல்வாக்குச் சரிவையே இது சுட்டிக்காட்டியபோதும் எதிர்க்கட்சிக் கூட்டணியிடமிருந்து- குறிப்பாகச் சி.சு கட்சியிடமிருந்து வெளிப்பட்ட இனவாதம் அதிர்ச்சியூட்டுவதாக இருந்தது.

இவர்களுடைய ஊர்வலத்தில் றோஹண விஜேவீரவின் படம் உயர்த்தியபடி கொண்டுசெல்லப்பட்டது. றோஹண விஜேவீரவின் ஆதரவும் தங்களுக்கு இருப்பதாகச் சுலோகங்கள் எழுதப்பட்டன. விஜயகுமாரதுங்கவைக் கொன்றவர்கள் ஐ.தே.கட்சியும் ஜனாதிபதி பிரேமதாசவும் என்று கோசம் எழுப்பப்பட்டது.

விஜய குமாரதுங்கவைக் கொன்றவர்கள் மக்கள் விடுதலை முன்னணியினர் (JVP) என்பது அனைவரும் அறிந்த ஒன்று. மேலும், இலங்கையின்; சிறுபான்மைத் தேசிய இனங்களைப் பொறுத்தவரை ம.வி.மு (JVP) எத்தகைய பேரினவாத நிலைப்பாட்டை எடுத்திருந்தது என்பதும் நாம் அறிந்தது. தங்களுடைய சொந்த ஆதரவாளர்களும், அபேட்சகர்களும் ம.வி.முன்னணியால் நூற்றுக் கணக்கில் கொல்லப்பட்டபிற்பாடும் வெட்கம்கெட்ட முறையில் எவ்வாறு இவர்களால் ம.வி முன்னணியை ஏற்றுக்கொள்ள முடிகிறது?

மேலும், பாரம்பரியமாக கண்டிச் சிங்கள பௌத்த தலைமைத்துவத்தையே கண்மூடித்தனமாய் பேணுகிற, பேண விரும்புகிற ஒரு கட்சியிடம் மலையக மக்கள் எதிர்ப்பு இருப்பதில் வியப்புக்குரிய அம்சம் எதுவும் இல்லை.

திரு. தொண்டமான் அவர்களை தூஷிப்பதும் அதனூடாக மலையக மக்களுக்கு எதிரான இனவாதத்தைக் கக்குவதும் சி.சு.கட்சியனருக்கு அவல் சாப்பிடுவது மாதிரி!

தொண்டமான் பூச்சாண்டியோடு சேர்த்து இப்போது “மலைநாடு” உருவாகப் போகிற சிங்கள பௌத்தர்களே விழித்தெழுங்கள் என்று ஊர்வலம் எங்கும் கோஷித்தார்கள்

இனப் பிரச்சினையைத் தீர்ப்பதைப் பற்றியோ அல்லது வடக்கு கிழக்கு யுத்தத்தைப் பற்றியோ அப்பாவி மக்கள் ஆயிரக்கணக்கில் மடிவதைப் பற்றியோ எதுவித கவனமும் அக்கறையும் காட்டாத சி.சு கட்சியும்-எதிரணி ஊர்வலமும் கூட்ட இறுதியில் அரசியல் தீர்வு பற்றிப் பேசியது ஒரு விநோதமான அம்சம்!

தேசிய கலாசாரம் (சிங்கள பௌத்த கலாசாரம் என்று புரிந்துகொள்ளவும்), தேசிய அடையாளம்(சிங்கள-பௌத்த அடையாளம் என்று புரிந்துகொள்ளவும்) என்பவற்றை மீளப் பெற வேண்டும் என்றும் பேணவேண்டும் என்றும் ஊர்வலத்தில் வலியுறுத்தப்பட்டது. ஜாதிகச் சிந்தனைகாரர் சி.சு கட்சியுடன் எப்போது சேர்ந்தார்கள் என்று எங்களுக்குத் தெரியாது (ஒருவேளை சி.சு கட்சியும் மற்வர்களும்தான் ஜாதிகச் சிந்தனை இனவாதக் கும்பலுடன் இரண்டறக் கலந்து விட்டார்களோ?)

அண்மையில் நிமால் சிறிபால டீ சில்வா என்னும் குறுமதி படைத்த சி.சு.கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சபாநாயகரையும் முஸ்லிம் மக்களையும் இழிவு செய்யும் விதத்தில் பாராளுமன்றத்தில் பேசியுள்ளார். இது பற்றிய எதிர்ப்புக்கள் சிறுபான்மை மக்களிடமிருந்து வந்தபோதிலும் சி.சு. கட்சியோ, நிமால் சிறிபால டீ சில்வாவோ இதனைப் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை.

ஜனநாயகம் சாதாரணமான அளவு நிலவும் மேற்கு நாடுகளில் இப்படி ஒரு உறுப்பினர் ஒரு சமூகத்தை இழிவுபடுத்தியிருந்தால் பாராளுமன்றத்தை விட்டல்ல கட்சியைவிட்டே கலைத்திருப்பார்கள். என்ன செய்யலாம்? எங்களுடைய ஆளும் கட்சியினதும் “ எதிர்க்கட்சியினதும் ஜனநாயகப் பாரியம்பரியத்தை” நாங்கள் சுடுகாட்டில் அல்லவா தேட வேண்டும்!

## பண்டார ராமாயணம்!



வால்மீகி, கம்பன்
வழி வந்து, ராமனுக்கு
நூல் செய்தார், நுண்மாண்
நுழை புலத்தார்; ராமபிரான்
போல் நீ உளதால், உன்
புகழ் பாடிட , நானும்
மாலுற்றேன்; தேவ
மகனே, தியசேனா!

*

பூவில் அதர்மம்
பொசுக்க, உளங்கொண்டார்
தேவர் ; மிதிலை எழும்
தேசத்து மன்னவனும்,
காலி தரித்த
வசிட்டர் தனை யடைந்து
சேவித்திட அன்னார்
சித்தமிரங்கி உடன்!

*

புத்திர காமேட்டி
யாகம் புரிந்திட அச
சித்தர் உதவியினால
ஸ்ரீராமனாய், இராவண
இந்துவாயில் வந்துதித்தான

இவ்விதமாய்த் தானே - வெள
ரிட்ஜ்வே எனும் பெயரால்,
தியசேன ! புத்தமதம்

*

வாழப் பிறந்தாய் ! விஸ்
வாமித்திரர் குடிலில்
பாலகனாய், ராமன்
படித்தான், உடனிருந்து;
ஈழத்து ராமா ! நீ
இவ்வாறே, சென் தோமஸ்
பாளையத்தார் வீட்டில், இளம்
பருவத்தில் தங்கியிருந்

*

தெல்லா நரிக்கலையும்
இலகு வாய்க் கற்றாய் ! பின்
பிள்ளாய் ! வளர்ந்தாய்!
பிறநாடு போய் வந்து,
குல்லாவைப் போட்டுக்
குழப்பும் அரசியலின்
தில்லுமுல்லுப் பேச் செழுத்தில்
தேறி, அரசோச்சும்.

*

சந்தர்ப்பம் பெற்றாய்

'சகுனி' இனவெறியின்
தந்திரமும், 'கேகேயித்'
தனிச் சிங்கள விதியும், .
முந்திக் கலவரத்தை
மூட்ட , குணதிலகர்
அந்தப் புரத்தினிலே
அஞ்ஞாத வாசம் போய்.

*

ஈரேழு நாட்கள்
இருந்தாய் ! பிலிப்பென்னும்
பேரோனை, ஒட்டியொட்டிப்
பின்னிருந்து, 'வாலிவதம்'
சீராகச் செய்தாய் !
'சீதை' இலங்கையினை,
கூறாக்கித் தம் பொருளாய்க்
கொள்ள முனைந்து வரும்,

*

சண்டாள ராவணனின்
சாதித் தமிழர்களைத்
துண்டாட வாரும்"எனத்
தூண்டுகிற மஞ்சள் உடைப்
பண்டார சுவாமிகளின்
பாதம் வருடுகிற

பண்டார நாயகனே !
பல்லாண்டு வாழியவே

*

சென்ற கிழமையில், உன்
செருப்பை, ஒரு கோவில்
முன்றலிலே, வைத்து விட்டு,
மூலக் கிருகத்துள்
சென்று திரும்பியகால்,
செருப்பைக் களவாடிக்
கொண்டெவனோ போன
குறிப்பறிந்து வாடினையாம்

*

ஹோர கொல்லை ஆவி வந்து,
கொண்டதுவோ ? உன் ஆசான்
நேரு கொண்டு போனாரோ ?
தேவர் கவர்ந்தனரோ?
ஆரு கொண்டு போனாலும்,
அஞ்சேல் ! உன் பாதுகைக்கு,
சீருடனே, பட்டாபி
ஷேகம் புரிந்திடுவார் !

- தான்தோன்றிக்கவிராயர் ○

நன்றி - நூலகத்திட்டம்



அவர் அப்படிக் கேட்ட போது எனக்கு என்னவோ போல இருந்தது. இருந்தாலும் உண்மை அதுதான். இங்கு ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் தங்கியிருந்து கொண்டு 'டெலிபோன் பண்ணுகிற' பெற்றார்கள் உறவினர்களைப் பார்க்கும் போது அவர் கேட்ட கேள்வியின் ஆற்றாமை இன்றும் துல்லியமாக விளங்குகிறது...''

உண்மைதான். வவுனியாவிலிருந்து கோட்டை புகையிரத நிலையத்தில் வந்து இறங்குகின்றவர்கள், பஸ்ஸிற்கு காத்திராமல் ஓட்டோவோ, டாக்சியோ அமர்த்திக் கொண்டு நேரே ஹோட்டல்களை நோக்கிப் போகிறார்கள். நாளுக்கு நூற்றி ஐம்பது ரூபாவிலிருந்து ஆயிரத்து ஐந்நூறு ரூபா வரையிலான கட்டணம் வசூலிக்கின்ற ஹோட்டல்களில் அவர்கள் தங்குகிறார்கள். பத்திரிகைகளில் 'நாள், வார, மாத வாடகைக்கு டெலிபோன் வசதியுடன் தங்குமிட வசதிகள் உண்டு' என்ற விளம்பரங்கள் வந்த வண்ணம் உள்ளன. மளிகைக் கடைகள் முதல் 'சைவக் கடைகள்' வரை எல்லாம் ஒரு பகுதியை இத்தகைய தேவைக்காக மாற்றி வைத்துள்ளன. டெலிபோன், 4X8 அடி விஸ்தீரண காட்போட் 'பாட்டிசன்' அறைகள் நாலைந்து என்பனவற்றை வைத்துக் கொண்டு மாதாந்தம் நிகர லாபமாக - பொலிஸ் காரர்களிற்கான மாமூல் போக - 50,000 முதல் 100,000 வரை வருமானம் பெறும் தொழில் ஆரம்பமாகி உள்ளது. வெளிநாடுகளில் இருந்து வரும் பணம் மாற்றப்பட்டு கொழும்பிலேயே பெரும்பாலும் செலவு செய்யப் பட்டு விடுகிறது.

ஆனால் அங்கிருப்பவர்கள் இதையெல்லாம் உண்மையில் பெரிதாக நினைப்பது குறைவு. அதற்கு இரண்டு காரணங்கள். ஒன்று; தாங்கள் இங்கிருப்பவர்களை விட வசதியாகவும் 'சுகபோகங்களை(?)' அனுபவித்த நோக்குடன் வந்து சேர்கிற பெரும்பாலானவர்கள் மிக மிக இளவயதுக் காரர்கள். 15 முதல் 28 வயதுக்குட்பட்டவர்கள். மிகுந்த நம்பிக்கைகளுடனும் எதிர் பார்ப்புடனும் வந்திறங்கும் அவர்களுக்கு அகதியாக அடைக்கலம் கோருவது (அசூல், அசூல் என்று கத்துவது) ஒன்றும் சந்தோசமான அனுபவமாக இருப்பதில்லை. சுவிஸிலிருந்து 'கொண்டயினர்கள்' போன்றவற்றில் இருத்தப்பட்டு மக்களுடனோ நகரத்துடனோ தொடர்பு கொள்ள முடியாத விதத்தில் தனிமைப் படுத்தப்படுவர். எல்லா நாட்டு அகதிகளையும் ஒன்றாகப் போட்டு வைப்பதும் நடைமுறைக்கு வந்துள்ளது. இது பலத்த சிக்கல்களை உருவாக்கும் என்பதில் ஐயமில்லை.




**- ரவீந்திரன்**

என்னுடன் ஃபோனில் பேசிய ஒருவர் சொன்னார்: ''எங்களை இங்கே நாய் என்று சொல்ல அவர்கள் தயங்குவதில்லை. ஆனால் தங்கள் வளர்ப்பு நாயை யாராவது நாய் என்று சொல்லிவிட்டால் அவர்களுக்கு பொறுக்கமுடியாத கோபம் வந்துவிடும். வேண்டாத விருந்தாளிகளாகப் போய்விட்ட எம்மை அடித்துத் துரத்துவது எந்த நிமிடத்திலும் நடக்கலாம்.''. ஜேர்மனியில் ட்ராம்களிலும், நிலக்கீழ் ட்ராம்களிலும் இவர்களைப் பார்த்து 'கறுப்பனே' என்று திட்டுகிற, மூக்கைச் சுழித்து அருவருப்பு அடைவதாக காட்டுகிற சம்பவங்கள் சாதாரணம். அதுவும் வர வர நாஜிகளின் செல்வாக்கு அதிகரித்துக் கொண்டிருக்கிற இந்த நாட்களில் இது மிகவும் அதிகரித்து உதாரணமாக மலை உச்சியில் தனிமைப்படுத்தப்பட்ட ஒரு முகாமின் அறைக் கதவொன்றில் பின்வரும் வாசகம் எழுதப்பட்டிருந்தது: 'இலங்கையரும் தாய்காரர்களும் தவிர'. அகதிகளுக்கிடையில் பல்வேறு முரண்பாடுகளும் ஏற்படக் காரணமாக முன்பின் அறிமுகம் இல்லாத அவர்களுடைய பழக்க வழக்கங்களே காரணமாகி விடுகின்றன. உதாரணமாக நாம் பார்க்கச் சென்ற ஒரு தனிமைப் படுத்தப்பட்ட அகதிமுகாம் ஒன்றின் முன்னால் இருந்த டெலிபோன் பூத்தில் எல்லா றிசீவர்களும் அகதிகளால் பிடுங்கப்பட்டிருந்தன. காரணம் யாருக்கும் தெரியாது. சாதாரண 'முசுப்பாத்தி' க்கு மேல் எந்தக் காரணமும் இருப்பதாக தெரியவில்லை. ஆயினும் இது



சுவீஸுக்கும் கனடாவுக்கும் என அனுப்பி ஏஜென்சிக்காரரால் கைவிடப்பட்ட நிலையில் ஆபிரிக்க நகரமான 'லோமே'யில் மரணமான ஒருவரின் இறுதிச் சடங்கு

படியும் இருப்பதாக அவர்கள் நம்புவது: மற்றது இங்கிருப்பவர்கள், 'கொழும்பில் வந்து நிற்கிற போதெண்டாலும் சந்தோசமாக நிக்கட்டன்' என்கிற அபிப்பிராயம். ஆனால் யதார்த்த நிலை இந்த விருப்பங்களுக்கு எதிர் மாறாகவே இருக்கிறது.

''இங்கிருந்து அங்கு 'அகதி' என்ற மதிப்பிற்குரிய பட்டப் பெயரைப் பெற்றுக் கொள்ளும் வருகிறது.. 83 யூலை இனக்கலவரத்துக்கு சற்று முன்பான நாட்களில் நிலவியதொரு 'அசௌகரியமான' சூழலை அங்கு உணரக் கூடியதாக இருக்கிறது.

அவர் மேலும் சொன்னார்; ''அகதிகள் பிரச்சினையை சமாளிக்கப் பலவிதமான புதிய சட்டங்களைக் கொண்டு வருகிறார்கள். பழைய கட்டிடங்கள், பொதிகளை ஏற்றும் பாகிஸ்தான், தமிழ் அகதிகளிடையில் முரண்பாட்டை ஏற்படுத்தியிருந்தது. கானாக் காரர்கள் மீது பெரிய வெறுப்பை உருவாக்கியும் இருந்தது. இந்த நிலை நீடித்தால் அகதிகளுக்கிடையில் கைகலப்புக்கு இட்டுச் செல்லும் என்பதில் ஆச்சரியமில்லை....''

(வரும்)

## இதுதான் பிரச்சினை!

தமிழ் இயக்கங்கள் போல் நாம் கொல்வதில்லை

பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் திருவாலித் அவர்கள் சரிநிகர் நிருபருக்கு சொன்ன வார்த்தை இது. சரிநிகரில் வெளிவந்த பேட்டியைப் படித்ததும் தலையில் கை வைத்து அழவேண்டும் என்ற உணர்வு நிலைக்குத் தள்ளப்பட்டேன். அதனால் இரண்டொரு பிறஷர் பில்ஸ்சையும் விழுங்க வேண்டியேற்பட்டது.

1985 பங்குனித்திங்களின் நடுப் பகுதியில் அன்று யாழ் பல்கலைக்கழக மாணவமுன்னோடிகளாக இருந்த சிலரின் முயற்சியால் யாழ் கிராமங்களில் அமைவு பெற்ற பொது நிறுவனங்களின் பேராளர்கள் யாழ்பல்கலைக் கழக மண்டபத்தின் மேல்மாடியில் (முன்னால் பரமேஸ்வரா மண்டபம்) ஒன்று கூடினார்கள். ஒரு வித திட்டமும் இல்லாமலேயே அக்கூட்டம் கூட்டப் பட்டது. அக்கூட்டத்தில், அன்று தமிழ் மக்களுக்காக போராடுகின்றோம் என்று கூறிக்கொண்ட போராளிக் குழுக்களின் தளபதிகளின் வால்களும் வந்திருந்தன. அவர்கள் பொது மக்களாகிய எமக்கு ஒரு திட்டம் ஆலோசனையின் பேரில் தருக என வேண்டிக் கொண்டு கலந்துரையாடலுடன் கூட்டம் அமைதியாக நிறைவு பெற்றது.

அடுத்த நாள் நாம் ஒன்று கூடிய பொழுது 55 வயது மதிக்கத்தக்க ஒருவர் எழுந்து தட்டுப் பொறி அச்சில் தயாரித்த 10 ஆலோனைகளை முன் வைத்தார் அதனை இங்கு தருகிறோம்.

### வாசகர் சொ(ர)வ்வழி

1. ஒவ்வொரு இயக்கங்களில் இருந்து 3 போராளிகளும் தமிழ் ஈழம் எனக்குறிக்கப்பட்ட நிலப் பரப்புகளில் வாழும் தமிழ் பேசும் மக்களிடையே (இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம்) இருந்து நீதி-நிர்வாகம், நிதி அநுபவங்கள் கொண்ட 51க்கு குறையாத உறுப்பினர்கள் கொண்ட உயர் ஆட்சிக் குழு அமைக்கப்படல் வேண்டும்.
2. இவ்வாட்சிக்குழு நீதி, நிர்வாகம், நிதி என்ற முப்பிரிவாக இயங்குதல் வேண்டும்.
3. தமிழ் விடுதலைக் குழுக்களிடையே எழும் பிரச்சினைகளை நீதிக் குழுவின் தீர்ப்பின்படி செயல்படுத்துதல் வேண்டும்.
4. பொலிஸ் வேலை, நீதிபதி வேலை நிறைவேற்று அதிகாரம் என்பன தனிநபர் ஒருவரிடமோ, தனியொரு குழுவிடமோ இருத்தல் கூடாது.
5. நீதிக்குழுவின் தீர்ப்பை அனைவரும் ஏற்றுக் கொண்டு அதனைச் செயற்படுத்துதல் வேண்டும்.

   நிர்வாகத்தில் விடுதலைப் போராட்டக் குழுக்கள் ஈடுபடக் கூடாது அதனை நிர்வாகக் குழுவே செய்தல் வேண்டும்.
6. நிதிக்குழுவே வரிவிதித்தல் தேவையான உணவு மற்றும் பொருட்களுக்குப் பொறுப்பாய் இருத்தல் வேண்டும்.
7. தமிழ் ஈழப்பிரதேசத்தை பல மாவட்டங்களாகப் பிரித்து அவற்றை ஒவ்வொரு குழுவிடத்திலும் பாதுகாக்க ஒப்படைத்தல் வேண்டும். இம் மாவட்டங்கள் திருவளச்சீட்டின் மூலம் தெரிவு செய்யப்படல் வேண்டும். (இப்படிக் கூறியவுடன் முதல் எழுந்த வினா யாழ் மாவட்டம் யாருக்கு என்பது. திருவுள்ளச் சீட்டின் முடிவே முடிவு எனக்கூறப்பட்ட பொழுது அதனை எந்தக் குழுவும் ஏற்கத் தயாராக இல்லை.)
8. பலம் கொண்ட அமைப்பு பலம் குறைந்த அமைப்புக்கு உதவ வேண்டும்.
9. மக்கள் மத்தியில் எந்த இயக்கமோ தனி- நபரோ நிதிசேகரிக்கக் கூடாது. நிதி சேகரிப்பு நிதிக்குழுவின் மேலாணைக்குட்பட்டதாய் அக்குழுவின் செயல் திட்டத்திற்கு உட்பட்டதாய் இருத்தல் வேண்டும்.
10. தமிழ் பேசும் மக்களின் விடுதலைக்கு முனைந்து நிற்கும் போராட்டக் குழுக்களின் (குழுவிற்கு மூவர்) பேராளர்களும் மக்கள் பேராளர் 51 பேரும் கூடித்தீர்மானிப்பதே இறுதி முடிவாக இருக்கும். அவர்களது முடிவை - தீர்ப்பை அமுல் படுத்துவதே போராட்டக் குழுக்களின் பணியாக இருக்கும்.

முன் மேற்குறித்த திட்டத்தினை அந்த 55 வயதுடைய முதியவர் முன் வைத்த பொழுது கூட்டத்தில் முணுமுணுப்புகள் தோன்றியது. எந்த குழுவும் இதனை ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை. சில குழுக்களின் பேராளர்கள் திருத்தம் வேண்டுமென்றனர். சில பேராளர்கள் திட்டம் நல்லது எங்கள் மேலிடம் ஏற்காது என்றார்கள். ஆனால் புலியின் பேராளராக வந்த திலீபன் ஓர் நையாண்டிச் சிரிப்புடன் அந்த முதியவரை அச்சுறுத்திய பார்வையுடன் நிராகரித்து விட்டார்.

இன்று அதில் கலந்து கொண்ட இயக்கங்களைச் சேர்ந்த திலீபன் போன்றோர்கள் பலர் மரணித்து விட்டனர்.

விடுதலையை வேண்டித் தியாக உணர்வுடன் வந்த பலர் நம்மை விட்டு பிரிந்து விட்டனர். சிலர் உயிருடன் இருந்தும் நடைப்பிணமாகி விட்டனர். அல்லது நாட்டை விட்டு சென்று விட்டனர்.

இவ்விடத்தில் ஒருகதை ஞாபகம் வருகிறது எனக்கூறி அம்முதியவர் ஒரு கதை சொன்னார்.

அரசிளங்குமாரியான தனது மகளுக்கு 32 இலட்சணங்களும் பொருந்திய மணமகனை தேடுமாறு மன்னன் முதல் மந்திரிக்கு ஆணையிட்டான். முதல் மந்திரி எங்கு தேடியும் 32 இலட்சணங்களும் பொருந்திய மணமகன் கிடைக்காததால் 30 இலட்சணங்களுள்ள வாட்டசாட்டமான கண்ணுக்கு பொலிவான மணமகனை அழைத்து வந்தார். திருமணத்தன்று மணமகனை மன்றில் இருத்தியாயிற்று. குருக்கள் மணமகனிடம் திருநீற்றைக் கொடுத்து பூசிக் குட்டிக் கும்பிடும்படி கூறினார். மணமகன் திருநீற்றை மணமகளின் தலையில் கொட்டினான். குருக்களுக்கு ஓங்கி குட்டினான். தாலியை தனக்கே புனைந்தான் இளவரசிக்கு அடியும் உதையும் கொடுத்தான்.

முதலமைச்சரை அரசர் கேட்டார்; இப்படியான மணமகனையா நான் கேட்டேன்.

அமைச்சர் சொன்னார், மன்னர் மன்னனே! 32 இலட்சணங்களில் 30 இலட்சணங்கள் உண்டு. இரண்டு தான் இல்லை.

ஒன்று; தானும் செய்யான், மற்றையது; பிறர் சொல்வதையும் கேளான்

இது தான் பிரச்சினை.

எஸ். ஆடியபாதம்
சுன்னாகம்.


நன்றி - நூலகத்திட்டம்



# "எங்கள் புதல்வர்களை எங்களிடமிருந்து பறித்தது யார் ?"







இ. சங்கரன்

ஜூன் 23, காலை பத்து மணி கொழும்பு புதிய நகர மண்டபத்தில் துயரங்களையும், காணாமல் போன தமது புதல்வர்களின் புகைப்படங்களையும் தாங்கியபடி ஆயிரக்கணக்கான அன்னையர்.

அன்னையர் முன்னணியின் இரண்டாவது நினைவு தினம்.

மேடையில் சிறிமாவோ பண்டாரநாயக்கா, சந்திரிக்கா குமாரணதுங்க, மஹிந்த ராஜபக்ஷ, ரிச்சர்ட் டி சொய்சாவின் தாயாரான மனோன்மணி சரவணமுத்து, இன்னுமிப்படி...

மாதுறுவேவ சோபித தேரோ அரசினால் வளர்த்து விடப்பட்ட வன்முறைக் கலாசாரத்தினையும், அதை எதிர்க்க முனைந்த ஜே.வி.பியும் அதே வகையான வன்முறையைக் கையில் எடுத்ததால் எழுந்த விளைவுகளைப் பற்றியும் பேசிக் கொண்டிருந்தார்.

அம்பாந்தோட்டை, காலி, மாத்தறை ஆகிய மாவட்டங்களிலிருந்து அதிகளவான அன்னையர் வந்திருந்தனர். ஜே.வி.பி. இற்கும் அரசுக்குமான பலப்பரீட்சையில் அதிகமாகக் கொல்லப்பட்டவர்கள் இம் மாவட்டங்களைச் சேர்ந்தவர்களே.

இதே போல இலங்கை அரச படையால் வடக்கு-கிழக்கில் கொன்றொழிக்கப்பட்ட, காணாமல் போன ஆயிரக்கணக்கான புதல்வர்களின் அன்னையர்கள் படை முகாம் வாசல்களில் தமது புதல்வர்களுக்காக ஏங்கிக் காத்துக் கிடந்தது நினைவுக்கு வருகிறது. போதாததற்கு நெய் மணமும், பெற்றோலும் எரிந்து கலந்து நெடி வீசுகின்ற முகாம்களுக்கு முன்னாலும் நாட்கணக்கில் காத்துக் கிடந்த அன்னையர்களும், இயக்க மோதல்களுக்குள் புதல்வர்களைத் தொலைத்து விட்டு நின்ற அன்னையர்களும் தான்.

பிரபல சிங்களப் பாடகியான நந்தா மாலினி காணாமல் போன புதல்வர்களைப் பற்றிய பாடலொன்றை பாட ஆரம்பிக்கின்றார். மண்டபம் நிசப்தமானது. ''எங்கள் புதல்வர்களை எங்களிடமிருந்து பறித்தது யார்?'' என அப்பாடல் ஆரம்பிக்கின்றது. அன்னையர் முகங்களைப் பொத்தியவாறு அழுகின்றனர். பாடல் தொடர்கின்றது. மெல்ல மெல்ல ஆரம்பமான விசும்பல் பலத்த அழுகையாக, பாடலின் இறுதியில் ஓலமாக மண்டபத்தையே அதிர வைக்கிறது.

தெருவோரத்தில் கருகியபடி கிடந்த, ரயர்க்குவியலிடையே, அல்லது களனியுடன் சங்கமமான அவர்களது புதல்வர்களது நினைவு நெஞ்சை உலுப்பியிருக்கிறது போலும்.

கூட்டத்திலிருந்து ஒரு தாயார் எனது பிள்ளையைத் தாருங்கள்!. என்று கதறியபடி மேடையை நோக்கி ஓடி வருகிறார். மார்பிலடித்துக் கதறுகிறார். அவரது உறவினர்கள் வந்து அவரை அணைத்து இருக்கையில் அமர்த்துகின்றனர்.

இப்போது சந்திரிக்கா பேசிக் கொண்டிருக்கின்றார்; அரசினதும், ஜே.வி.பியினதும் கொலைகளைப் பற்றி. தனது கணவர் விஜயகுமாரணதுங்க கொல்லப்பட்டது பற்றிப் பேசுகிற போது அவரது நா தழ தழக்கிறது. பேச முடியாமல் நிறுத்தி நிறுத்திப் பேசுகிறார்.

'எனது மகனையும் இப்படித்தான் கொன்றார்கள்' என்றபடி ஒரு தாயார் எழுந்து ஓவென அலறுகிறார் அவரது உயர்த்திய கையில் மகனது புகைப்படம்.

கூட்டத்தினரிடையேயிருந்து அன்னையர் அவ்வப்போது மேடையில் இருக்கும் சிறிமாவோவிடம் ஏதோ கடிதங்களைக் கொடுக்கிறார்கள். காணாமல் போன தமது பிள்ளைகள் பற்றிய மனுக்களாயிருக்கக் கூடும்.

பாவம், இப்போது அன்னையர்களுக்கெல்லாம் அன்னையராய் காட்சி தரும் அம்மையார் எழுபத்தொன்றில் என்ன செய்தார் என்பதை மறந்து போனார்கள் போலும். பிறகு, ஒரு மாணவன் பேசுகிறான்; ஆக்ரோஷமான கைகளை விசுக்கி, முஷ்டியை மடக்கிப் பேசுகிறான். எம்பிலிப்பிட்டியவில் இரண்டோ மூன்று நாட்களில் முப்பத்தியொரு மாணவர்கள் காணாமல் போய் விட்டார்கள். ஒரே பாடசாலையிலிருந்து ஒரே நாளில் பதினொரு மாணவர்கள் தூக்கிச் செல்லப்பட்டார்கள்.

இடையே கூட்டத்திலிருந்து சலசலப்பு; யாரோ ஒருவர் மயங்கி விழுந்து விட்டார். ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்கிறார்கள். பின்னர் கிடைத்த செய்தி; அவர் ஆஸ்பத்திரியில் இறந்து விட்டார் என்பது. கண்டி ஹேவாஹெட்டயைச் சேர்ந்தவர் இறந்த சுபசிங்ஹ. ஒரு ஆசிரியர். இவரது மகன் பேராதனைப் பல்கலைக் கழக மாணவன். 1989 இல் பல்கலைக் கழகத்திலிருந்து காணாமல் போனான்.

யாழ்ப்பாணத்தில் மன நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும், குறிப்பாகப் பெண்களே மனநோய்க்கு இலக்காவதாக்வும் வாசித்த பத்திரிகைச் செய்தி ஞாபகத்திற்கு வந்தது இப்போது.

எல்லாச் சம்பவங்களும் வடக்கு, கிழக்கை நினைவூட்டுவதாயிருந்தது. இவர்களைப் போல்தான் அந்த அன்னையர்களும் தமது புதல்வர்களையும், கணவன்மாரையும் யுத்தத்திற்கு காவு கொடுத்துவிட்டு நிற்கிறார்கள்.

இறுதியாக சிறிமாவோ அம்மையார் பேச ஆரம்பிக்கின்றார். 71 இல் இதே வாறான அவரது ஆட்சியில் அவரது கரங்களில் படிந்த இரத்தக் கறையை மறைத்துக் கொண்டு. எழுபதுகளில், ஆரம்பத்தில் பயங்கரவாதிகள் என்ற போர்வையில் ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர் கொல்லப்படவும், சிறைகளில் அடைபடவும் காரணமானவர் என்பதை மறைத்துக் கொண்டு, இன்னமும் வட-கிழக்கில் நடத்தப்படும் யுத்தத்தையும், ஆயிரக்கணக்கான இளைஞர்கள் கொல்லப்படுவதையும் நியாயப் படுத்திக் கொண்டு, ஜனநாயகத்தைப் பற்றிப் பேச அம்மையாராலும் அவரைப் போன்றவர்களாலும்தான் முடியும்.





நன்றி - நூலகத்திட்டம்



# ஆயுதம் இல்லை : மக்கள் ஆதரவு இருக்கிறது

**- கிழக்குத் திமோர் விடுதலை இயக்கத் தலைவர்**

1975 ஆம் ஆண்டு தன்னுடைய இறுதிக் கொலனிகளில் ஒன்றாக இருந்த கிழக்கு திமோருக்கு போர்த்துககல் சுதந்திரம் வழங்கியது. உடனடியாகவே அண்டை நாடான இந்தோனேஷியா கிழக்குத் திமோரை ஆக்கிரமித்துத் தன்னுடைய 27வது மாகாணமாகப் பிரகடனம் செய்துவிட்டது.

16 ம் நூற்றாண்டில் ஐரோபபியர் வருகைககு முன்னா தீமோர் தீவுப் பிராந்தியம் பறறி எதுவுமே அறியபபட்டிருககவில்லை. நூஷா றெங்கார கூடடத் தீவுகளில் இது பெரிதாக இருந்ததுடன், ஐரோபபாவிடனான இதன் தொடர்பும் மிக ஆரமப காலததிலேயே, சுமார் 500 வருடங்களுக்கு முனனாகவே ஏறபட்டும் இருந்தது. எனினும இதன் இருப்புக் குறித்து 20 ஆம் நூற்றாண்டின் ஒரு குறிப்பிட்டகாலம் வரை உலகரீதியாக கவனம் எதுவும் பாவலாக ஈர்ககப்படவில்லை என்றே கூற வேண்டும்.



ஹோரேஸ்

அன்றிலிருந்து இன்றுவரை, இன்னும் தொடாச்சியாக கிழக்குத் திமோர் மக்கள் போராடி வருகிறாாகள். **FRETILN** என்று வழங்கப்படும் கிழக்குத் திமோர் மக்களின் விடுதலை அமைப்புக்குத் தலைவர் **குஸ்மாவோ ஷனானா.** கடந்த வருடம் டிசம்பர் மாதம் கிழக்குத் திமோரின் தலைநகரான **டிலியில்** நடைபெற்ற மாபெரும் எதிர்ப்பு ஊர்வலம் ஒன்றின் மீது இந்தோனேஷியத் துருப்புக்கள் கண்மூடித்தனமாகத் துப்பாக்கிப் பிரயோகம் செயததில் நூற்றுக் கணக்கானோர் கொல்லப்பட்டமை, கிழக்கு திமோரை மறுபடியும் உலக அரங்கிற்கு முன் கொண்டு வந்துள்ளது. **FRETILN** அமைப்பின் நிறுவுநர்களில் ஒருவரும் கிழக்கு திமோர் விடுதலைக்காக உழைக்கும் **அனைத்து** இயக்கங்கள், பொதுசன அமைப்புக்கள் என்பவற்றின் ஐக்கிய முன்னணியான **மௌபேரி** எதிர்ப்பியக் கத்தின் தேசிய சபை **(National Council of Maubery Resistance)** யின் சிறப்புத் தூதருமான **ஹோரேஸ் ராமோஸ் ஹொர்தா** சரிநிகரின் ஐரோப்பிய நிருபருக்கு அளித்த சிறப்புப் பேட்டியைக் கீழே தருகிறோம்.

ஹோரேஸ், ஆங்கிலத்தில் ஃபுனு (FUNU) என்றொரு நூல் எழுதியுள்ளார். யுத்தம் என்று பொருள்படும் அந்த நூல் அவருடைய விடுதலைப் போராட்ட அனுபவங்களைச் சுவாரசியமாக விவரிக்கிறது.

**உலகின் மற்றைய விடுதலை இயக்கங்களுடன் ஒப்பிடுகிறபோது உங்களுடைய இயக்கம் எவ்வாறு வேறுபடுகிறது?**

இன்றுள்ள நிலைமையில் முக்கியமான வேறுபாடு என்ன வெனில் நாம் கட்டுக் குலையாத ஒரு ஐக்கிய முன்னணியைக் கட்டியுள்ளோம் என்பதும் கட்டற்ற வன்முறையில் நாம் ஈடுபடவில்லை என்பதும்தான்.

**உங்களுடைய எதிர்ப்புப் போர் பற்றிக் கொஞ்சம் சொல்லுங்கள் ?**

ஆயுதமேந்திப் போராடும் கொரில்லாக்கள் தொகை எங்கள் மத்தியில் குறைவு. மிஞ்சிமிஞ்சிப் போனால் ஏழாயிரம் பேர் இருப்போம். இந்தப்படை ஒருகாலமும் இராணுவ ரீதியாக இந்தோனேஷியாவைத் தோற்கடிக்க முடியாது. ஆனால் மக்களுடைய ஆதரவு எங்களுக்கு இருக்கும்வரை இந்தோனேஷியா ராணுவம் எவ்வளவு பலமிக்கதாக இருந்தாலும் எங்களை வெல்லமுடியாது. இறுதி நிலையில் சர்வதேச அங்கீகாரத்துடன் கூடிய ஒரு பேச்சு வார்த்தையே தேவைப்படும். ஒரு வகையில் எங்களுடைய எதிர்ப்பு உளவியல், கலாசாரம், அரசியல் அணைத்தும் சார்ந்த ஒரு குறியீட்டு எதிர்ப்பு (Symbotic Resistance) என்று சொல்லவேண்டும்.

இந்தோனேஷிய அரசும் அதன் கூலிப்படையும் எவ்வளவு மிருகத்தனமானவர்கள் என்பதை நாம் உலகுக்கு வெளிப்படுத்தியுள்ளோம். அதேநேரம் எங்கள் மீது இதுவரைக்கும் எவராலும் எத்தகைய 'பயங்கரவாதக்' குற்றச் சாட்டையும் முன்வைக்க முடிய வில்லை.

**ஆனால் உங்களுடைய FUNU (யுத்தம்) என்னும் நூலில் ஒரு சம்பவத்தைக் குறிப்பிடுகிறீர்கள். போர்த்துக்கல் 1975 இல் வெளியேறிய பிறகு FRETILN கொரில்லாக்கள் ஆட்சிக்கு வருகிறார்கள். இந்த ஆட்சி குறுகிய காலத்திற்கே நீடித்ததாயினும் அதற்கிடையில் எதிரணியினரையும், மாற்றுப் போராளிகளையும் பிரதானமர்ன FRETILN இயக்கப் போராளிகள் கைது செய்தும் சித்திரவதை செய்தும் உள்ளார்கள் என்பதே அது. இதனை எப்படி விளக்குவீர்கள்?**

அது ஒரே ஒரு சம்பவம் என்பது மட்டுமல்ல, உடனடியாகவே நான் நேரடியாகத் தலையிட்டது மட்டுமன்றி சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கத்தைப் (ICRC) பொறுப்பாக நியமிக்கும்படி ஏற்பாடு செய்தேன். இதைவிட வேறு சம்பவங்களை நீங்கள் கண்டுபிடிக்க மாட்டீர்கள்.

**பேச்சுவார்த்தைகள், சமாதானம் இவற்றுக்கான சாத்தியப்பாடு எவ்வளவு உள்ளது?**

நாங்கள் முன் நிபந்தனையற்ற முறையில் ஐக்கியநாடுகள் அவையின் அநுசரணையுடன் இந்தோனேஷிய அரசுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட எப்போதும் தயாராக உள்ளோம். இதுபற்றி எமது தலைவர் **ஷனானா** அடிக்கடி வலியுறுத்தியுள்ளார். ஆனால் இந்தோனேஷிய அரசுதான் எவ்வகையான பேச்சுவார்த்தைகளிலும் ஈடுபட மறுத்துவருகிறது.

எங்களைப் பொறுத்தவரை எங்களுடைய திட்டம் பின்வருமாறு: முதலாவதாக சுயாட்சிபெற்ற ஒரு பிரதேசமாகக் கிழக்குத் திமோர் அங்கீகரிக்கப்பட வேண்டும். இது ஐந்து வருடத்திற்கு நீடிக்க வேண்டும். இந்த ஐந்து வருடத்துள் நாம் ஒரு தேசியச் சபையைப் பொதுத் தேர்தல் மூலம் தேர்ந்தெடுத்துக்கொள்வோம். ஐந்து வருடங்களின் பிற்பாடு கிழக்குத் திமோர் தனியரசாவதா அல்லது இந்தோனேஷியாவுடனிணைவதா என்பது பற்றி ஒரு பொதுசன வாக்கெடுப்பு (Referendum) நடாத்தப்படலாம்.

**உங்களுடைய போராட்டத்துள் எதிர்க் கட்சிகளுண்டா?**

எல்லோரும் ஐக்கிய முன்னணியில்தான் உள்ளனர். தீவிரவாத மார்க்ஸிஸ்டுகளிலிருந்து கத்தோலிக்க அடிப்படைவாதிகள் வரை பல வகையானோர் எங்களுடைய ஐக்கிய முன்னணியில் உள்ளனர். எமது ராணுவம் தனிப்பிரிவு. அதன் மீது FRETILN இற்கு முற்று முழுதான உரிமை இல்லை. ஒரு தொழில்சார் (Professional) அமைப்பாக ராணுவம் உள்ளது. பயிற்சியிலிருந்து தெரிவுவரை அனைத்தும் மக்களூடாகவும் ஐக்கிய முன்னணியூடாகவுமே நடைபெறுகிறது.

**இலங்கைத் தமிழ் மக்களின் போராட்டம் பற்றி என்ன அறிந்து வைத்திருக்கிறீர்கள்?**

நிறையவே அறிந்துவைத்துள்ளேன். 1983 இலிருந்து வருடாவருடம் நிறையத் தமிழர்களை ஜெனீவாவிலும் நியூயோர்க்கிலும் சந்தித்திருக்கிறேன். 1986இல் தமிழ் மக்கள் போராட்ட ஆதரவு மாநாடு ஒன்றில் எங்களுடைய விடுதலை இயக்கமும் கலந்துகொண்டது. இன்றைய நிலையில் உங்கள் போராட்டம் மிகுந்த சிக்கலாகியுள்ளது. பிரதானமான பொறுப்பை நீங்களே ஏற்க வேண்டும் என்று தோன்றுகிறது. உங்களிடம் ஐக்கிய முன்னணிதான் இல்லாவிட்டாலும் பரவாயில்லை. இன்று சர்வதேச அரங்கில் குரலெழுப்புகிற தார்மீக பலம் (Moral Strength) கூட இப்பொழுது உங்களுக்கு இல்லை என்று தோன்றுகிறது. ராணுவத் தந்திரங்களிலும், ஆயுத நேர்த்தியிலும் (Sophistry) புலிகள் உலகில் முன்னணியில் இருக்கலாம் அது மட்டும் மக்களுக்கு விடுதலை தராது.

எங்களிடம் ஆயுதம் இல்லை. பலமான கொரில்லாப்படையும் இல்லை. மக்கள் ஆதரவும் அனைத்துலக அரவணைப்பும்தான் உள்ளது.



திமோர் கெரில்லாப் போராளி

நன்றி - நூலகத்திட்டம்



**ஏழு தமிழ்க் கட்சிகளாலும் முன் வைக்கப்பட்டுள்ள நான்கு அம்சத் திட்டம் பற்றி என்ன சொல்கிறீர்கள்? அது தொடர்பாக சிறிலங்கா சுதந்திரக்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி போன்றவற்றுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளீர்களே, இப்பேச்சுவார்த்தைகளின் விளைவு என்னவாயிருக்கிறது?**

நான்கு அம்சத் திட்டம் என்பது ஒரு புதிய விடயமல்ல. இது தான் குறைந்தபட்ச நிலைப்பாடு. அதாவது முதல் வடக்கு, கிழக்கு இணைப்பு, இரண்டாவது அதிகாரப் பகிர்வு, மூன்றாவது இவ்வாறான ஒரு இணைப்பில் முஸ்லீம்களுடைய நிலைப்பாடு, நான்காவது இவ்வாறான இணைப்பில் சிங்கள மக்களுடைய நிலைப்பாடு. இது தான் எமது அடிப்படைக் கோரிக்கை. இதற்குக் கீழே-குறிப்பாக இணைப்புச் சம்பந்தமாகப் போகமுடியாது.

நேற்று திவயின பத்திரிகையிலிருந்து போன் பண்ணிய போது திட்டவட்டமாக இவற்றையே கூறினேன். அவர்கள் கூறினார்கள் இது நியாயமற்றது என்று. நான் கேட்டேன் நாங்கள் தனிநாடு கேட்ட போது அது நியாயமற்றது. இணைப்பு கேட்ட போது அது நியாயமற்றது. இப்படியே கீழே, கீழே எல்லாம் கேட்டுக் கொண்டு வந்து கிராம சபை கேட்கிறபோது அதுவும் நியாயமற்றது என்று சொல்லி, அதற்குப் பிறகு நீங்கள் எங்களுக்கு உதைக்கிறதுக்குத் தயாராகி இருக்கிறீர்களா என்று.

எனவே இது தான் எமது குறைந்த பட்சக் கோரிக்கை. இதைத் தான் இறுதியாக முன்வைக்க வேண்டுமென விரும்பினோம்.

மற்றையது; இக்கோரிக்கைகளை முன்வைத்து ஏனைய கட்சிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடந்தன. இதில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் சேர்ந்து கொண்டது எமக்குப் பெரிய பலம். எதிர்பாராத ஒரு பலம். அது மக்கள் மத்தியில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அவரும் தமிழ் கட்சிகள் பற்றி வேறுவிதமாக நினைத்துக் கொண்டிருந்து இப்போது எங்களுடன் வந்தது எமக்கு ஒரு தனிப்பூரிப்பு. இதனை நாம் உத்தியோக பூர்வமாக மற்றைய கட்சிகள் முன்வைத்து அவர்களது ஆதரவைக் கோர வேண்டும் என்று தான் புறப்பட்டோம்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு முன்னால் நாம் இதனை வைக்கவில்லை. ஆனாலும் ஜனாதிபதி முன் இதனை ஒரு அறிக்கையாக முன் வைத்தோம். அவர் என்ன சொன்னார் என்பது பத்திரிகையில் வெளியாகியது. அவரைப் பற்றிக் கதைத்துப் பிரயோசனமில்லை என்பது தான் எனது தனிப்பட்ட கருத்து. சிறிலங்கா சுதந்திரக் கட்சி திட்டவட்டமாக எதனையும் கூறவில்லை. தாம், தமது மத்திய குழுவைக் கூட்டி, ஆராய்ந்து சொல்வதாகச் சொன்னார்கள். அவர்கள் சொல்கிறதை இனிப் பார்க்க வேண்டும் எப்ப வருமென்று. மற்ற விடயங்கள் போல இருந்தால் ஒரு போதும் எம்முடன் தொடர்பு கொள்ள மாட்டார்கள்.

ஆனாலும் இடதுசாரிக் கட்சிகளாகக் கருதப்படும் கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, நவசமசமாஜக் கட்சி ஆகியவற்றிடமிருந்து ஒருவாறு எம்மை ஆதரிக்கிற மாதிரியான பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. இது தொடர்பாக உத்தியோக பூர்வமாக அறிக்கைகளை வெளியிடுமாறு கேட்டிருந்தோம். ஆனாலும் இற்றை வரைக்கும் ஒரு அறிக்கையும் வெளிவரவில்லை. அவர்கள் எல்லோரும் கூடி எதிர்க்கட்சிகளை நான்கு அம்சத் திட்டத்திற்கு ஆதரவு தருவதற்கு நடவடிக்கை எடுப்போம் என்று உறுதியளித்தார்கள். அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் இவை. தெரிவுக்குழுவில் அங்கம் வகிக்கின்றன. ஆகையால் இவர்களை முதலில் சந்தித்துப் பேசினோம். இது தவிர ஏனைய கட்சிகளான லிபரல் கட்சி, ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னனி (D.U.N.F.) ஆகியவற்றைச் சந்தித்துப் பேசினோம். மற்றைய கட்சிகளுடனும் பேசியுள்ளோம். முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் வந்திருப்பதால் அவர்களுடன் உடனடியாகப் பேசவேண்டியுள்ள சில விடயங்களைப் பேசி உத்தியோக பூர்வமான முடிவுக்கு வந்தால் நல்லதென நினைக்கிறோம்.

**தெற்கிலுள்ள பேரினவாதக் கட்சிகள் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதில் அக்கறையாக இல்லை என்று தெரிவித்திருந்தீர்கள். அவ்வாறாயின் இப்பிரச்சினையின் அடுத்த கட்டம் என்னவாக இருக்கும்?**

எவ்வளவு செய்ய முடியுமோ அவ்வளவு செய்ய நான் தயாராயிருக்கிறேன். ஆனாலும் உண்மையாக நான் நினைக்கிறேன் இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட மாட்டாது என்று. ஏனென்றால் சிங்களக் கட்சிகளுக்கு அக்கறை இல்லை. அவர்களுக்குச் சார்பாக இருப்பது ஒரு சில தமிழ் மக்கள். வீட்டுக்குள் உரிமைகளைப் பற்றிக் கதைக்கிறார்களே தவிர வெளியில் கதைப்பதற்குத் தயாராக இல்லை. தங்களுடைய சொந்த விசயங்களைத்தான் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள்.

**யாரைக் குறிப்பிடுகிறீர்கள்?**

இன்றைக்கு அரசாங்கத்தை ஆதரித்துக் கொண்டிருப்பவர்களைத்தான் அவர்கள். சரியானவர்களாக இருந்தால் ''வை இந்தத் தீர்மானத்தை'' என்று கேட்கலாம். ஆனாலும் எங்களுடைய ஆட்கள் கொழும்பில் அப்படிக்கேட்பதற்குத் தயாராக இருக்கிறார்களா? ''அப்படிக் கேட்டால் எங்களுடைய தலை போய் விடும்'' என்று குழறுவார்கள். அப்படியென்றால், அவர்கள் உரிமைகளைப்பற்றிக் கதைக்கக்கூடாது. அரசாங்கத்துடன் இருப்பவர்களை மட்டுமல்ல, கொழும்பில் இருந்து கொண்டு அரசாங்கத்தை ஆதரித்துக் கொண்டிருக்கிற துரோகிகளையும் தான் நான் குறிப்பிடுகிறேன். அவர்கள் நினைத்தால் இன்றைக்கு அரசாங்கத்தைக் காலடிக்குக் கொண்டுவரலாம். இங்கே ஒரு பேச்சு, அங்கே ஒரு பேச்சு. இப்படிப்போனால் ஒன்றும் சரிவராது.



## தனிநாடு நியாயமற்றது

## இணைப்பும் நியாயமற்றது

## அப்படியானால் தீர்வு எது?

**சுதந்திரக் கட்சி உட்பட ஏனைய சிங்களக் கட்சிகளிடம், புலிகளுக்கும், தொண்டமானுக்கும், எதிராக என்ற பெயரில் தமிழ் மக்களுக்கெதிராக வளர்ந்து வரும் முரட்டுத்தனமான இனவாதம் தமிழ் மக்களின் பிரச்சினைகளைப் பேசித் தீர்ப்பதற்கான வாய்ப்புக்களை ஒழித்து வரும் போது பேசித்தீர்ப்பதற்கு இந்தத் தெரிவுக்குழு எடுக்கும் முயற்சிகள் எந்தளவு சாத்தியமானவை?**

கந்தளம ஹோட்டல் விடயத்தைப் பற்றி நாம் பேசவேண்டியதில்லை. அது இனப்பிரச்சினைக்குச் சம்பந்தமான ஒரு விடயமல்ல. தொண்டமான் அது தொடர்பான அமைச்சராயிருக்கிறாரே தவிர அது அரசினுடைய தீர்மானம். தொண்டமான் அது தொடர்பான (உல்லாசப் பிரயாணம்) ஒரு அமைச்சராயிருப்பது ஒரு துரதிர்ஷ்டமான நிலை. இது போக நான் மீண்டும், மீண்டும் சொல்வது போல் எனக்குத் தீர்வு வரும் என்கிற ஒரு நம்பிக்கையும் இல்லை. தெரிவுக் குழு ஒரு கடைசிக் கட்டம் என்ற வகையில் தான் நாம் தீவிரமாக இருக்கின்றோம். ஆனால், இதுதான் அவர்களுடைய நோக்கம் என்றால் தெரிவுக் குழுவினாலும் கூட ஒன்றும் நடைபெறாது என்பது தான் எனது தனிப்பட்ட எண்ணமாக இருக்கின்றது. ஆனாலும் தெரிவுக்குழு ஒரு வாரம் தொடர்ந்து கூடுகிற போதும் கூட அவர்கள் மற்றைய விடயங்கள் மாதிரி சும்மா இழுத்தடித்துக் கொண்டு போகத் தயாராக இருக்கின்றனர் என்ற எண்ணத்தைத் தான் எங்களுக்கு ஏற்படுத்தியிருக்கின்றார்கள்.

**தெரிவுக்குழு தோல்வியடைந்தால் அடுத்து நீங்கள் என்ன செய்வதாக உத்தேசித்துள்ளீர்கள்.?**

நான் ஒன்றும் செய்ய முடியாது. ஆனால் தமிழ் மக்களுடைய பிரதிநிதிகள் இருக்கிறார்கள். அவர்கள் தான் என்ன செய்ய வேண்டுமென்று தீர்மானிக்க வேண்டும். நான் ஒரு நிலையில் இருந்திருந்தால் எனக்குத் தெரியும் நான் என்ன செய்திருப்பேன் என்று. இப்போது நான் கதைக்க முடியாத ஒரு நிலை. அப்படி தமிழ் மக்கள் என்னுடைய தலையில் தட்டி இருக்கிறார்கள். ஆகையால் இந்தக் கேள்வியை என்னைக் கேட்டுப் பிரயோசனமில்லை. நான் இதைத் தான் செய்ய வேண்டுமென்று என்னுடைய நண்பர்களுக்குச் சொல்கிற போது அவர்கள் அதை ஏற்பதற்குத் தயாராக இல்லை. காரணம் என்னவென்று நீங்களே ஊகித்துக் கொள்ளுங்கள்.

**தமிழ் மக்களுடைய பிரதிநிதிகள் என்று யாரைக் குறிப்பிடுகிறீர்கள்?**

பாராளுமன்றத்தில் இருப்பவர்களைத்தான். ஏனென்றால் இற்றைக்கு எமது நிலையை நாம் உலகிற்குப் பகிரங்கப்படுத்த வேண்டுமென்றால் பாராளுமன்றம் தான் மிகவும் சிறந்த மேடை. அந்த மேடையை நாங்கள் சரிவரப் பயன்படுத்த வேண்டும். அல்லாவிடில் அதனையும் நாம் தவற விட்டவர்களாகத்தான் கணிக்கப்படுவோம்.

**இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின்படி இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாக இந்தியாவுக்குக் கடப்பாடு உள்ளதாக அண்மையில் குறிப்பிட்டிருந்தீர்கள். இக் கடப்பாடு என்ன? இந்தியா என்ன செய்ய வேண்டுமென்று எதிர்பார்க்கிறீர்கள்?**

இந்தியாவை தமிழ் மக்கள் இரட்சகர்களாகத்தான் கருதுகிறார்கள். இவ்வடிப்படையில் தான் தமிழ் மக்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று கடந்த காலங்களில் செயற்பட்டிருக்கின்றது. எனினும் இன்று-1989ம் ஆண்டிற்குப்பின் கசப்பான சூழ்நிலை உருவாகியுள்ளது. ஆனாலும்கூட அவ்வொப்பந்தத்தின் கீழ் அவர்கள் செய்ய வேண்டிய விடயங்கள் இன்னமும் உண்டு. அது மாத்திரமன்றி, அவர்கள் பல விடயங்கள் தொடர்பாக உத்தரவாதம் வழங்கியுள்ளனர். அதை அவர்கள் செய்து முடிக்க வேண்டும். இன்றைக்கு நாம் ஒன்றுமில்லாத நிலையில்தான் இருக்கின்றோம். இலங்கை-இந்திய ஒப்பந்தம்தான் எல்லாம் என்று யாரும் சொல்ல வரவில்லை. ஒப்பந்தம் வேண்டாம் என்றவர்களும் கூட மனச்சாட்சி சம்பந்தமாக பேசுவதானால் இது தமிழ் மக்களின் நிலையை கொஞ்சம் உயர்த்தி இருக்கிறது என்று ஒப்புக் கொண்டே ஆக வேண்டும்.

ஆனாலும் இந்த ஜனாதிபதி வந்த பிறகு அதன் சாதகமான விடயங்களை எல்லாம் எடுத்துவிட்டார். ஆகையால் இன்றைக்கு மாகாண சபையும் இல்லை. 13வது திருத்தச் சட்டமும் சரிவராது. இந் நிலையில் ஒப்பந்தம் இன்னமும் நிலைத்து நிற்பதால் இந்தியா இது தொடர்பாக இலங்கை அரசுடன் திட்ட வட்டமாக பேச வேண்டும். ''நாம் ஒரு ஒப்பந்தம் செய்திருக்கிறோம். அது சரிவர நடக்கவில்லை. உங்களது நிலைப்பாடு என்ன'' வென்று இந்தியா இலங்கையிடம் கேட்டிருக்க வேண்டும் அதனை இந்தியா சரிவரச் செய்ய வேண்டும். அல்லது உலகிற்கு அறிவிக்க வேண்டும்.

**இந்தியாவின் அண்மைய மாற்றங்கள் குறிப்பாக இந்திய-அமெரிக்க உறவில் ஏற்பட்டு வரும் மாற்றம், புலிகள் மீதான தடை போன்றவற்றால் இந்தியா இப்பிரச்சினையில் தலையிட்டு தீர்வு காண முயற்சி எடுக்கும் என்று எதிர்பார்க்கலாமா?**

ஒப்ந்தத்தின் கீழ் முயற்சி எடுக்க வேண்டும் என்பதுதான் எனது நிலைப்பாடு. நாம் மற்றைய விடயங்களைப் பற்றி அக்கறைப் படத்தேவையில்லை. புலிகளைத் தடைசெய்வது அமெரிக்காவுடன் அவர்களது உறவு என்பன அவர்களின் வெவ்வேறு பிரச்சினை. அமெரிக்காவுக்குப் பயப்படுவது என்றால் அமெரிக்கா, இந்தியாவிற்கு சொல்லியிருக்க வேண்டும். ஒப்பந்தத்தைச் செய்ய இந்தியாவிற்கு அதிகாரம் இல்லையென்று. எனவே ஒப்பந்தத்தை நடைமுறைப் படுத்தவில்லை என்றால் அதனைக் கிழித்தெறியவேண்டும்.

**இனப்பிரச்சினைக்கு உடனடியாக தீர்வைக் காண வேண்டும். புலிகள் அழிக்கப்பட்டால் தமிழர் எதையும் எதிர்பார்க்க முடியாது உதட்டளவில் பேச்சுவார்த்தை என்பதைக்கூட அரசு கைவிட்டுவிடும் என்று கூறியிருக்கிறீர்களே, அவ்வாறாயின் புலிகளை ஏற்றுக் கொள்ளுகிறீர்களா? மறுபுறத்தில் மற்றைய தமிழ் கட்சிகள் மக்களை பாதிக்காதவாறு யுத்தத்தை நடாத்துமாறு கூறியுள்ளனவே அது பற்றி என்ன சொல்லுகிறீர்கள்?**

புலிகளை நான் ஏற்பதா இல்லையா என்பதல்ல பிரச்சினை புலிகளைப் பற்றி எனது அபிப்பிராயத்தை நான் பகிரங்கமாக கூறியுள்ளேன். புலிகள் மட்டுமல்ல எல்லா இயக்கங்களும் தமிழ் மக்களின் விடுதலை என்ற ஒரே நோக்கத்துடனேயே ஆரம்பிக்கப்பட்டது. அரசுடன் மோதும் போதும் அவ்வாறே இருந்தது. ஒற்றுமையாக எல்லாவற்றையும் செய்தார்கள். பாராட்டப்பட வேண்டிய விடயங்கள் எல்லாம் நடைபெற்றன. ஆனால் அண்மைக் காலத்தில் புலிகள் மட்டுமல்ல எல்லா இயக்கங்களும் தமது நோக்கில் இருந்து சறுகி எவ்வளவோ கேவலமான விடயங்கள் நடந்தேறியுள்ளன. புலிகளும் அதற்கொரு காரணமாக இருக்கிறார்கள். ஆனாலும் இன்றைய அரசியல் நிலையில் புலிகள் ஒரு பங்கை வகிக்கிறார்கள். அது என்னவென்றால் புலிகள் அரசுடன் இராணுவ ரீதியாக மோதிக் கொண்டு இருக்கிறார்கள் என்பதே. புலிகள் இவ்வாறு அரசுடன் மோதிக் கொண்டு இருப்பதால்தான் இனப் பிரச்சினை ஒன்று இங்கிருப்பதாக அரசு உணர்கிறது. அதுவுமில்லாவிடின் எங்களைத் தூக்கி எறிவார்கள். அப்படித் தூக்கியெறிவதற்கு எங்கள் மத்தியிலுள்ள ஒரு சில கேவலமான தமிழர்களும் கூட ஒத்தாசையாக உள்ளார்கள். இவ்வடிப்படையில்தான் நான் கூறுகிறேன் புலிகள் ஒரு முக்கியமான வேலையைச் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று. இதனை நான் மாத்திரமல்ல வேறு சில இயக்கங்களும் கட்சிகளும் ஏற்கின்றன. ஆனால் பகிரங்கமாகச் சொல்ல அவர்களுக்கு நா கூசுகிறது அதற்கு நான் என்ன செய்ய முடியும். புலிகளை ஒழித்தால், எல்லோரும் எங்களை உதைப்பார்கள். முதல் உதை வேண்டுவது பிரேமதாசாவின் காலை நக்கிக் கொண்டிருக்கும் தமிழர்கள்தான். அதற்குப் பிறகுதான் நாங்கள். இந்தக் கேவலமான நிலையை புலி தடுக்கிறது. எனவே புலியை ஒழித்தால் எமது நிலை அரோகராதான்.

இரண்டாவது மற்றத் தமிழ் இயக்கங்கள் இராணுவ ரீதியில் செயல்பட்ட இயக்கங்கள். நானோ ''கெற்றப்பொல்'' ஐ ஏந்தாத ஒருவன். ஆகையால் இராணுவ ரீதியில் இறங்கியும் கூட, மக்களைப் பாதிக்காமல் எவ்வாறு நடவடிக்கை எடுப்பதென்பது அவர்களுக்குத்தான் விஷேடமாக தெரிந்த விடயம். எனக்கு அதைப்பற்றித் தெரியாது.

**ஜூன் 15 இல் ஜனாதிபதியை சந்தித்து பேசிய பிற்பாடு அதுவொரு கேலியான விரக்தியான அனுபவம் எனக் குறிப்பிட்டிருந்தீர்களே ஏன்?**

ஏனா? நான் சொல்கிறேன் ஏன் என்று. அவர் ஜனாதிபதி என்று சொல்லப்படுபவர் எங்களுக்குச் சொல்கிறார்; தங்களுடைய தேர்தல் விஞ்ஞாபனம் இணைப்பிற்கு மாறு என்று. அதே சமயம் சொல்கிறார்; ஆனாலும் கூட Consensus ஐ நீங்கள்

பார்க்க பக்கம் 10

நன்றி - நூலகத்திட்டம்



# ஐன்லாலும் அவரது வீடியோ படங்களும்



வீடியோத்திரைப்படங்களில் புதுமையையும் பரிசோதனைகளையும் நிகழ்த்தி வருகிற **ஐன் லாலின்** அண்மைக்காலத் தயாரிப்பான **கங்கா**, இந்த வருடம் ஏப்ரல் மாதம் நெதர்லாந்தில் இடம் பெற்ற பத்தாவது அனைத்துலக வீடியோப் படவிழாவில் அமோக வரவேற்பைப் பெற்றுள்ளது.

குறுந் திரைப் படங்கள், விவரணப்படங்கள், வீடியோப் படங்கள் சம்பந்தப்பட்டவரை இலங்கையில் மிகவும் புகழ் பெற்ற பெண் இயக்குநரான ஐன் லால் சிங்களம், தமிழ், ஆங்கிலம், ஹிந்தி ஆகிய மொழிகளில் குறுந்திரைப்படங்கள் பலவற்றைத் தயாரித்துள்ளார்.

''ஒரு கணப் பொழுதாவது உண்மையை உக்கிரமாக காட்சிப் படிமத்தூடாகப் பார்ப்பவரின் முகத்திலறைய முடியுமானால்'' தான் மகிழ்வேன் என்று கூறுகிறார்.

கலைகளில் ஈடுபாடும், எளிமையும் அநாயசமான கோட்பாடுகளில் சிக்குப்பட்டுக் கொள்ளாத இயல்பும் ஒருங்கமையப் பெற்ற ஐன் லாலின் கலா வாழ்வு ஆர்வந்தருவது.



[illegible]—

பேராதனைப் பல்கலைக் கழகத்தில் ஆங்கில இலக்கியம் படித்துப் பட்டதாரியான பிற்பாடு நுண் கலைகளையும் கட்டிடக் கலைத்துறைகளையும் படிக்க கேம்பிரிட்ஜ் சென்றார். இரண்டு வருடங்களுக்கு மேல் 'கல்வியுலக வாழ்வை'ச் சகிக்க முடியாமல், விட்டு விலகி சினிமாத்துறையுட் சேர்ந்தார். பிரிட்டன் திரைப்படக் கல்லூரியின் பட்டதாரியான ஐன் ஆரம்பத்தில் கல்விக்கு உதவும் வீடியோப் படங்களை எடுத்தார்.

எழுபதுகளில் பிற்பகுதியில் நியுடெல்லியில் இருந்தபோது தூரதர்ஷனுக்காக வாரந்தோறும் சிறு சிறு படங்கள் எடுத்து வந்தார். ''நான்கு வருட தூரதர்ஷன் அனுபவம் பயன் மிக்கது என்றாலும் சுதந்திரமான திரைப்படக் கலைஞராக இருப்பதில் உள்ள நிறைவு விவரிக்க முடியாதது'' என்று கூறுகிறார்.

சர்வதேச தொழிலாளர் சங்கம் **(I.L.O).** ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் நிதியம் **(UNICEF)** போன்ற உலக நிறுவனங்களின் அழைப்பின் பேரில் சில விவரணத் திரைப் படங் களைத் தயாரித்துள்ளார்.

சமூக யதார்த்தத்தை ஆவணப் படுத்துவதற்கும் அப்பால் விவரணத் திரைப்படங்கள் மேலும் ஆழமான பணியை ஆற்ற முடியும் என்று உறுதியாக கருதுகிற ஐன்லால் பெண் ஒடுக்குமுறை, பெண் நிலை வாதம், பெண்களின் நிலை பற்றிய பல குறுந் திரைப்படங்களைத் தயாரித்துள்ளார்.

இனத்துவ ஆய்விற்கான சர்வதேச நிலையத்துக்காக அவர் தயாரித்த மூன்று படங்கள் மிகவும் சிறப்பு வாய்ந்தவை. பெண்களும் மதமும் என்ற தொடரில், **சக்தி பிறக்குமா?,** என்ற தமிழ் படத்தையும், **சன்ஸார தீயனியோன்** என்ற சிங்களப் படத்தையும் **A Womens's Cross** என்ற ஆங்கிலப் படத்தையும் இயக்கியுள்ளார்.

இந்தப் படங்கள் மூன்றும் முறையே இந்து, பௌத்தம், கிறித்தவ மதங்கள் பெண்மையை எவ்வாறு அணுகுகின்றன? எவ்வாறு கட்டுப்படுத்துகின்றன என்பன பற்றியவை. இந்தத் தொடரில் இஸ்லாமும் பெண்களும் என்ற அவரது குறுந்திரைப்படமும் மிகவும் புகழ் பெற்றது.

**ஜகோரி, அலாரிப்பு** ஆகிய பெண்ணுரிமை நிறுவனங்களுடன் தீவிரமாக இயங்கிவந்த ஐன் லாலின் அண்மைய தயாரிப்பான கங்கா, புராண இதிகாசச் சிறப்புமிக்க கங்கை நதியைப்பற்றியது. கர்ண பரம்பரைக் கதைகளின்படி கங்கை சாபத்தின் விளைவால் பூமிக்கு வந்து வாழ நேரிடுகிறது. இந்த வாழ்க்கையின் போது தனக்குப் பிறக்கும் குழந்தைகளை கங்கை கொல்ல வேண்டி ஏற்படுவதும் புராணிகம். ஐன் லாலின் **கங்கா** பெண்மையின் பல தள அனுபவங்களை பலவிதமான அர்த்தப் பாடுகளோடு சொல்ல முயல்கிற ஒரு கவிதா அனுபவமாகும். பரத நாட்டியம், கதகளி, இயற்கை அழகு போன்ற எல்லா அம்சங்களையும் பயன்படுத்தி ஐன் லால் பேசுகிற ஒரு மொழி காட்சிக்குரியது; கவனத்தை ஈர்ப்பது; மனதைப் பிழிய வைப்பது.

ஒகஸ்ட் 27-30 வரை இலங்கை மன்றக் கல்லூயில் நடைபெறவிருக்கும் இரண்டாவது தென்னாசியக் குறுத் திரைப்படங்கள், விவரணப் படங்கள் விழாவை ஒழுங்கு படுத்துவதில் இப்போது உழைத்து வரும் ஐன்லாலின் படங்களை இந்த விழாவில் நீங்கள் பார்க்க முடியும்.

இனத்துவ ஆய்விற்கான சர்வதேச நிலையம் ஏற்பாடு செய்துள்ள இத் திரைப்பட விழாவில் இந்தியா, பங்களாதேஷ், பாகிஸ்தான், மாலைதீவு, நேபாளம் ஆகிய நாடுகளிலிருந்து படங்கள் காண்பிக்கப்பட உள்ளன.

''இம்முறை வெவ்வேறு மாநிலங்களிலிருந்து தயாரிக்கப்பட்ட படங்களுக்கு முக்கியத்துவம் வழங்குகிறோம்'' என்று சொல்கிறார் ஐன்.

திரைப்படம் எடுக்காத வேளைகளில் சிற்பம் செதுக்குவதிலும், முனைந்துள்ள ஐனின் சிற்பம் ஒன்று கீழே உள்ளது.



# அழிஞ்சிப்பொத்தானை முத்துக்கல் அழிவுகள்

அழிஞ்சிப் பொத்தானை, முத்துக்கல், கரபொல கிராமங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான முஸ்லிம், தமிழ் மக்களின் படுகொலைகளைப் பற்றிய மேலும் தகவல்களும் விவரங்களும் இப்போது கிடைத்துள்ளன.

இனத்துவ ஆய்விற்கான சர்வதேச நிறுவனத்தின் பணிப்புரையின் பேரில் சட்டத் தரணி ஷாந்த பீரிஸ் அவர்களும் பேராசிரியர் 'ஜீன் மாரிஸெக் அவர்களும் பாதிக்கப்பட்ட மக்களைச் சென்று சந்தித்து விட்டு வந்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்கள்.

பாதிக்கப்பட்டவர்களுடனான நேர்காணல், புகைப்படங்கள் மற்றும் இதர விவரங்களுடன் வெளியாகியுள்ள இவ்வறிக்கை நுணுக்கமான பல தகவல்களைத் தருகிறது. எமது சிங்கள சகோதர பத்திரிகையான "யுக்திய" சார்பிலும் நிருபர் குழு ஒன்று பாதிக்கப்பட்ட இடங்களுக்குச் சென்று வந்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

மனித உரிமைகள் நிறுவனமான இன்ஃபோர்ம் (Inform) சார்பிலும் சுனிலா அபேசேகரா தலைமையில் ஒரு குழுவினர் விவரமான அறிக்கையொன்றைத் தந்துள்ளனர். இத்தகைய எல்லாத் தகவல்களினடிப்படையில் பார்க்கும் பொழுது சரிநிகர்- 16 வது இதழில் வெளியான சில தகவல்கள் திருத்தமானவையல்ல என உணர்கிறோம். குறிப்பாக மரணச்சடங்குகளுக்கான செலவுத் தொகை கொல்லப்பட்ட தமிழ் மக்களின் குடும்பத்தினர்க்கு வழங்கப்படவில்லை என்று எழுதியிருந்தோம். ஆனால் பாதிக்கப்பட்ட எல்லாக் குடும்பத்தினர்க்கும் மரணச் சடங்குச் செலவுத் தொகை வழங்கப்பட்டுள்ளது என்பதே உண்மை.

மேலும், தமிழ்ப் பெண்கள் பாலியல் பலாத்காரத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்பது உண்மையெனினும் அவர்களினுடல் கண்ட துண்டமாக வெட்டப்பட்டுக் காட்டுள் வீசப்பட்டது என்ற தகவலில் உண்மை இருப்பதாக நிரூபிக்க முடியவில்லை.

இத்தகைய தகவல் பிழைகளுக்காக வருந்துகிறோம். முக்கியமாக வெளியாகியிருக்கும் இன்னொரு தகவல் தமிழ்க் கிராமங்களின் மீது நிகழ்த்தப்பட்டுள்ள கொலை வெறியாட்டங்களில் அரசுடன் இணைந்த பணி புரியும் தமிழ் இயக்கத்துக்கும் பங்கு இருந்திருக்கிறது என்பதாகவும் இத்தகைய தகவல்கள் திடுக்கிட வைப்பதாக இருக்கும் அதே வேளை மனிதப் படுகொலைகள் இனத்துவ எல்லைகளை மீறி - வெறும் சுயநல அரசியல் வன்முறையாக மாறி விட்டுள்ளமையையும் காட்டுகிறது.

குழந்தைகளின் இரத்தத்தின் மீது இனத்துவப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியுமெனில் அத்தீர்வு மனிதர்களுக்குரியதாக இருக்காது.

## விமலேஸ்...

போதே போராட்டம் வெற்றியடையும் என நம்பினான். அதற்கான பணிகளிலும் ஈடுபட்டான்.

இனக் கலவரத்தால் பாதிக்கப்பட்டு புகலிடம் தேடிவந்த மலையக மக்களையும், அன்போடு வரவேற்றான். கிளிநொச்சி பகுதியில் குடியேற்றுவதில் தானே முன்னின்றது மல்லாமல் ஒரு குடியேற்றத் திட்டத்திற்கு தானே பொறுப்பானவனாகவும் விளங்கினான். தவிர தமிழ் பிரதேசங்களின் எல்லைப்புறங்கள் திட்டமிட்டு அபகரிக்கப்படுவதால் அவற்றைப் பாதுகாக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதனை தான் சார்ந்திருந்த P.L.O.T அமைப்பிற்கு வலியுறுத்தி அதற்கான நடவடிக்கைகளிலும் ஈடுபட்டான்.

அவனது இறுதிக்காலத்தில் அவன் உழைக்கும் வர்க்கத்தின் தலைமையிலே தேசிய விடுதலைப் போராட்டத்தை நடத்த வேண்டும் என விரும்பினான். புலிகளால் தேடப்பட்டு தலைமறைவாக இருந்த காலத்தில் யாழ்ப்பாணத்து செம்மண் பிரதேசதங்களிலுள்ள வறிய கூலி விவசாயிகள் மத்தியிலேயே அரசியல் வேலையை மேற்கொண்டு தலைமையைக் கட்டுவதற்கு முயற்சித்தான்.

தமிழ் தேசியப் போராட்டத்தில் விமலேஸ்வரன் பிரக்ஞையுடன் செயற்பட்டவர்களுள் முக்கியமானவன். அவனது இழப்பு தேசியப் போராட்டத்தின் பேரிழப்பு !

நன்றி - நூலகத்திட்டம்



# சத்யஜித் ரே

திரைப்படக் கலைஞனும், ஓவியனும், இசையாளனும் குழந்தைகளுக்குப் பத்திரிகை நடத்தியவனுமான ஒரு உன்னத மனிதன் ஏப்ரல் மாதம் கால மானான்.

சத்தியஜித்ரே

வங்காளக் கலாச்சாரத்தினதும் இந்திய வாழ்வியலானதும் மேல் நாட்டுச் "சுதந்திரச் சிந்தனையினதும் கூட்டு விளைவான ரே எனும் அற்புதமான மனிதர் இறக்கும் போது அவருடைய இறுதிப் படம் முடிவடையாமலே இருந்தது என்பது மிகத் துயரம்.

பதர் பாஞ்சாலி (1955) யுடன் ஆரம்பித்த ரேயின் திரைக்கலையாக்கம் அகாந்துசல் (1991) வரை இடையறாமல் மெருகேறிச் சுடர்ந்தது.



ஆரம்பத்தில் ஹொலிவுட்டினதும் இத்தாலியத்திரைப்பட மேதை விற்றோறியோ டீ சீக்கா வினதும் பாதிப்புக்கள் ரேயிடம் தென்பட்ட போதிலும் தன்னுடைய நெடும் பணியின் பிற்பாடு உலகத் திரைப்படத் துரையில் ரே ஒரு சிகரமாகவே மாறி விட்டார். நகர்ப்புரத்து நடுத்தர வர்க்கத்தை சித்திரிப்பதிலாயினும் சரி (சாருலதா, மகா நகர் போன்ற படங்கள்) ஆர்ப்பாட்டமற்ற கிராமிய வாழ்க்கைப் பலத்தை சித்திரப்பதிலாயினும் சரி (பதர் பாஞ்சாலி, அஹானி சங்கெட் ஆகிய படங்கள் ) நிலப்பிரபுத்துவச் சீரழிவைச் சுட்டுவதாயினும் சரி ( ஷத்ரஞ் கே கிலாரி) ரே அற்புதமானதொரு சுயத்தை வெளிப்படுத்தினார்.

தன்னுடைய வாழ்க்கைக் காலத்திலேயே தன்னுடைய படைப்புக்கள் அனைத்தும் ஓரளவு முற்றாக விமர்சிக்கப்படுவதை, கிலாகிக்கப்படுவதை போற்றப்படுவதை, அனுபவித்த மிகச் சில கலைஞர்களுள் ரே யும் ஒருவர் என்பது உண்மைத் தான்.

திரைப்படத் துறையில சாத்தியமான உன்னத விருதுகள் அனைத்தும் அவருக்கு வழங்கப்பட்டுவிட்டன.

ரேயின் வாழ்வு இரண்டு முக்கியமான எழுத்தாளர்களால் நன்கு ஆவணப்படுத்தப் பட்ட முறையுல் எழுதப்பட்டுள்ளது. (மேரி செற்றன். 1978) அன்ட்றூ றொபின்சன். 1989).

எல்லா அர்த்தங்களிலும் உயரமான சத்தியஜித் ரே எனும் உயர்ந்த மனிதர் ஒரு பெரிய வெற்றிடத்தை விட்டுச் சென்றுள்ளார் வெற்றிடங்களை இயற்கை விடுவதில்லை, நிரப்பி விடும் என்பது உண்மையேயாயினும் சில வெற்றிடங்களை நிரப்ப இயற்கைக்கு நீண்ட காலம் எடுக்கும்.

ரேயைக் 'கௌரவிக்கும் முகமாக விபவி, மாற்றுக் கலாச்சார நிலையத்தினர் ரேயின் படங்களை வீடியோவில் திரையிட்டு விழாவொன்றை நிகழ்த்தியிருந்தனர்.

## தனிநாடு ...

கொண்டுவா என்றால் எங்களை எல்லாம் மடையர்கள் என்கிறமாதிரிதான் கணித்து வைத்திருக்கின்றார். சொல்வதை நேர்மையாகச் சொல்ல வேண்டும். எங்களுடைய தேர்தல் விஞ்ஞாபனம் ஒரு நாளும் இடம் கொடுக்காது என்று சொன்னால், அது வேறு விடயம். இது என்னவென்றால் செய்யலாம், என்னுடைய சத்திராதியிடமிருந்து கொண்டுவா பார்ப்போம், என்று சொன்னால் இது கேவலம். இது எங்களை மாத்திரம் அல்ல முழுத்தமிழனத்தையும் முட்டாளாக்குகின்ற விடயம்.

**பதிலாக ஜனாதிபதி செயலகம் அது உங்களது தனிப்பட்ட அனுபவம் என சாடியுள்ளதே?**

தனிப்பட்ட அனுபவம் என சாடியுள்ளதே? இது ஒரு Un Precedented Move அதாவது எப்பவும் நடக்காத விடயம். ஒரு தனி நபருடைய பேச்சு சமபந்தமாக ஜனாதிபதி செயலகம் தலைகீழாக நின்று இப்படியான ஒரு பதில் கொடுப்பதென்றால் அது ஒரு போதும் நடை பெறுவதில்லை. அவர்களுக்கு உடனடியாக தெரிந்தது தாம் ஒரு பாரதூரமான விடயத்தைச் சொல்லிவிட்டோம். ஒரு பெரிய பிழையை விட்டுவிட்டோம் என்று. அதை மழுப்புவதற்குத்தான் அவ்வாறான ஒரு அறிக்கையை வெளியிட்டார்கள். பின்னைய என்னுடைய அறிக்கை அவர்களுடைய முகத்தில் நன்றாகப் போய் அறைந்து விட்டது. எனது அறிக்கையை அவர்களுடைய பத்திரிகைக்கும் - லேக்கவுஸ் - அனுப்பினேன். ஆனால் அது எவ்வளவு தாக்கத்தை உண்டுபண்ணும் என்பது குறித்து தெரிந்து அவர்கள் அதை இதுவரை தங்கள் பத்திரிகையில் வெளியிடவில்லை. ஆகவே நான் இது தொடர்பாய் சொல்லக் கூடியது என்னவென்றால் பிரேமதாசாவின் அரசாங்கம் கேவலமான ஒரு கோழை அரசாங்கம் என்பதைத் தான்.


# கே.ஜீ.பீ. , சீ.ஐ.ஏ. றோ ஏஜண்டுகள் இலங்கையில் யார் ?



- படப்பிடிப்பு: சிரியங்க இல்லெபால

கே. ஜ பீ. என்றழைக்கப்படும் முன்னாள் சோவியத் யூனியனின் உளவு சேவை , சீ. ஐ. ஏ. எனப்படும் அமெரிக்க உளவு சேவை றோ என்றழைக்கப்படும் இந்திய உளவு சேவை என்பன மற்றைய நாடுகளில் ரகசியமாக மேற்கொண்டு வந்த - வருகிற நடவடிக்கைகள் அவ்வப்போது அம்பலமாவது வழக்கம். ஜுன் மாதம் பத்தாம் தேதி வெளியான மொஸ்கோ நியூஸ் எனும் ரஷ்ய வாரப் பத்திரிகை கே.ஜீ.பீ மற்றும் சோவியத் கொம்பியூனீஸ்ட் கட்சி ஆகியன இந்தியாவிலும் இலங்கை யிலும் மேற்கொண்டு வந்த சில ரகசிய நடவடிக்கைகளை அம்பலப்படுத்தியுள்ளது.

திருமதி சிறிமாவோ பண்டார நாயக்காவின் "நன்றிக் கடிதத்தை மேற்கோள் காட்டி கே.ஜீ.பீ தலைவர் மேலும் குறிப்பிடுகையில் "சிறிலங்கா சுதந்திரக் கட்சி தன்னுடைய முழுப் பலத்தையும் பாராளுமன்றத்தில் பாவித்து மேலை நாடுகளுக்குச் சார்பான .ஐக்கிய தேசிய கட்சியின் கொள்கைகளை எதிர்க்கும் என்று திருமதி சிறிமாவோ பண்டார நாயக்கா உறுதி தெரிவித் துள்ளார்." என்று வலி யுறுத்தினார்.



**சிவாகௌதமன்**

1989 மார்ச் மாதம் கே.ஜீ.பீ யின் தலைவர் விளாடிமீர் கிர்யூச் கோவ் அப்போதைய சோவியத் யூனியனின் கொம்பயூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளா ரான மிஹைல் கொர்பச்சேவுக்கு எழுதிய ரகசியக் கடிதத்தில் பின்வரும் விஷயங்களைக் குறிப்பிடுகின்றார்.

"சோவியத் கொம்பயூனிஸ்ட் கட்சியின் நிதி உதவி மூலம் திருமதி பண்டாரநாயக்காவின் சிறிலங்கா சுதந்திரக் கட்சி (SLFP) முன்னரைவிட எட்டு மடங்கு அதிகமான இடங்களைக் கைப்பற்ற முடிந்தது."

இதே போல் கே.ஜீ.பீ க்கு நெருக்கமான பலர் ஐக்கிய தேசிய கட்சியிலிருந்தும் (U.N.P) சிறிலங்கா சுதந்திரக் கட்சியி லிருந்தும் பாராளுமன்றத்துக்கு தெரிவாகியுள்ளனர்.

திருமதி சிறிமா பண்டார நாயக்காவின் நன்றிக் கடிதமுட்பட ஏனைய ஆவணங்களையும் மொஸ்கோ நியூஸ் பிரசுரித் துள்ளது.

இவ்வாறே இந்திய (ப) ரகசிய உளவு சேவையான றோ பற்றிய தகவலொன்றை ஹிந்து பத்திரிகை அண்மையில் வெளியிட்டுள்ளது. இதன்படி இந்தியத் தூதராலயங் களில் பல்வேறு மாறுபட்ட பணிகளில் கடமை புரியும் றோ ஏஜண்டுகள் அவ்வப்போது இந்திய நலன் பேணும் விதத்தில் செய்திகளையும் தகவல்களையும் சம்பந்தப்பட்ட நாடுகளின் பத்திரிகைகளில் எப்படியோ வரப்பண்ணி விடுவார்களாம். இத்தகைய செய்திச் செருகல் களில்" மிகவும் நீண்டகாலமாக றோ ஈடுபட்டு வந்துள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

நன்றி - நூலகத்திட்டம்



# கொழும்பில் சுதந்திரப் பத்திரிகை இயக்கம்!

மே மாதம் இரண்டாம் திகதி பிற்பகல் கொழும்பு புதிய நகர மண்டபத்தில் சுதந்திரப்பத்திரிகை இயக்கம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. மண்டபம் கொள்ளாமல் நிரம்பி வழிந்த பல நூற்றுக்கணக்கான மக்கள் கூட்டம் முடிவு வரை உணர்வு பூர்வமாகப் பங்கேற்றனர்.



விக்டர் ஐவன் — சுனந்த தேசப்ரிய — சுனில் மாதவ — சிறிலால் கொடிகார — ஆஸியன்

சுனில் டி சில்வா — ஆரியனந்த — சுஜீவ திசநாயக்க — பந்துல — அஜித் சமரநாயக்க

இலங்கையில் பத்திரிகைச் சுதந்திரத்துக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலையும், பத்திரிகையாளர்கள் மீதான தாக்குதல், வழக்கு என்பனவற்றைக் கண்டித்தும் கருத்துச் சுதந்திரத்தை வலியுறுத்தியும் கூட்டத்தில் பலர் உரையாற்றினார்கள்.

இலங்கைப் பத்திரிகை உலக வரலாற்றிலேயே இக் கூட்டம் ஒரு முக்கிய திருப்பு முனை எனலாம். பழம்பெரும் எழுத்தாளரும் பத்திரிகையாளருமான சிறிலால் கொடிகார தலைமையில் நிகழ்ந்த இந்தக் கூட்டத்தில் ''தி ஐலன்ட்'' பத்திரிகையைச் சேர்ந்த அஜித் சமரநாயக்கா மற்றும் லூஷியன் ராஜகருணநாயக்கா, ''ராவய'' பத்திரிகை ஆசிரியர் விக்டர் ஐவன், ''யுக்திய'' பத்திரிகையின் ஆசிரியர் சுனந்த தேசப்ரிய, ''லக்திவ'' பத்திரிகையின் ஆசிரியர் சுனில் மாதவ பிரேமதிலக,'' விவரண'' பத்திரிகை ஆசிரியர் திரு எஸ். சீ. புஞ்சிஹேவா, ''அத்த'' பத்திரிகையின் ஆசிரியர் லொக்கு பண்டா வணிகசேகர, மற்றும் ''லங்காதீப'' பத்திரிகையைச் சேர்ந்த லக்ஷ்மன் ஜயவர்த்தன உட்பட பதினான்கு முக்கியமான பத்திரிகையாளர்கள் உணர்வு பூர்வமாக உரையாற்றினார்கள்.

பொலிசாரும், உளவுப்பிரிவினரும் சமூகம் தந்திருந்தாலும் அசம்பாவிதம் எதுவும் இடம் பெறவில்லை.

சி. சு. கட்சியைச் சேர்ந்த மஹிந்த ராஜபக்ஸ எம். பி. சந்திரிகா குமாரதுங்க, மற்றும் காமினி திசாநாயக்கா உட்பட பல எதிர்க் கட்சியினர் கூட்டத்திற்கு சமூகமளித்திருந்தனர்.

சிறப்புப் பேச்சாளராக திரு சேரன் கலந்து கொண்டு உரையாற்றினார்.

''கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திர மறுப்பு, பத்திரிகைக்கு சுதந்திர மறுப்பு, தணிக்கை இவையனைத்தும் இன்றைய நிலையில் இனத்துவ பிரச்சினையுடன் ஒரு வகையில் நேரடியாகப் பிணைக்கப்பட்டுள்ளது'' என்றும் ''1979 ஜூலை 15 ம் தேதி யாழ்ப்பாணத்தில் அமுலுக்கு வந்த அவசர நிலையின் பிற்பாடு மெல்ல மெல்ல அரசு வடக்கு - கிழக்கு பத்திரிகை சுதந்திரத்தையும் அரசியல் குரலையும் ஒடுக்க ஆரம்பித்தமையின் தவிர்க்க முடியாத - தர்க்கரீதியான விளைவே இன்றைய நிலை'' என்றும் சேரன் தன்னுடைய உரையில் குறிப்பிட்டார்.

கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக வடக்கு - கிழக்கில் பத்திரிகைகளுக்கு நிகழ்ந்த அவலத்தை ஈழநாடு எரிப்பிலிருந்து, முரசொலி, ஈழநாதம் என்பன இந்திய ராணுவத்தால் குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டது ஈறாக விரிவாகக் குறிப்பிட்ட சேரன் அக்காலங்களில் தெற்கிலிருந்து ஒரு பத்திரிகையாவது ''பத்திரிகைச் சுதந்திரம்'' பற்றிக் குரலெழுப்பவில்லை என்று சுட்டிக் காட்டினார். லலித் அத்துலத் முதலி, சிறிமா பண்டாரநாயக்கா, ஜனாதிபதி பிரேமதாச உட்பட அனைத்து அரசியல் வாதிகளும் பத்திரிகைச் சுதந்திரத்தைப் பொறுத்தவரை மோசமானவர்கள் தான் என்று ஆதாரங்களுடன் விளக்கினார்.



சற்றர்டே றிவியூ பற்றியும் காமினி நவரத்தினாவைப் பற்றியும் எடுத்துக் சொல்லி, தெற்கின் பத்திரிகையாளர்கள் இப்போதாவது விழித்தெழுந்துள்ளமை ஆரோக்கியமானது என்றும் குறிப்பிட்டார்.

அஜித் சமரநாயக்கா தொடர்பு சாதனங்கள் மீதான தணிக்கைச் சபையின் கடந்த கால நடவடிக்கைகள் பற்றியும், சுனந்த தேசப்பிரிய லேக்ஹவுஸ், ரூபவாஹினி, மற்றும் அரச தொடர்பு சாதனங்கள் பற்றியும், சுனில் மாதவ் மாற்றுப் பத்திரிகைகளுக்கு எதிரான அரச அடக்குமுறைகள் பற்றியும், விக்டர் ஐவன் பத்திரிகையாளர்களுக்கு எதிரான நேர்முக, மறைமுக நெருக்கடிகள் பற்றியும் உரையாற்றினார்கள்.

சுதந்திரப் பத்திரிகை இயக்கம் ஏழு தீர்மானங்களை மக்கள் முன் வைத்து நிறை வேற்றியது.

இவற்றில் முக்கியமான தீர்மானம் இனவாதத்தை தூண்டும் சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகளின் பேரினவாதப் போக்கைக் கண்டிப்பதாக அமைந்தது.

சுதந்திரப் பத்திரிகை இயக்கத்தின் சார்பில் பத்திரிகைச் சுதந்திரம், கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் பேணும் தீர்மானங்களில் எல்லா அரசியல் கட்சிகளையும் ஒப்பமிடக் கூறி பிரசாரம் ஆரம்பிப்பதாகவும் முடிவு செய்யப்பட்டது. ஏற்கனவே பல எதிர்க் கட்சிகள் இத் தீர்மானத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அனுஷா

# செல்விக்கு சர்வதேச விருது

International PEN என்று அழைக்கப்படும் சர்வதேச கவிஞர்கள், எழுத்தாளர்கள், நாவலாசிரியர்கள் கூட்டமைப்பு (Poets, Essayists and Novelists) அவர்களுடைய வருடாந்தச் சிறப்புப் பரிசை இம்முறை செல்விக்கு (செல்வநிதி தியாகராசா) வழங்கியுள்ளது.

தங்களுடைய நம்பிக்கைக்காகவும், இலட்சியத்திற்காகவும் எழுத்துத் தளத்திலும் கலைத் தளத்திலும் பணி புரிந்தவர்களை, புரிபவர்களைக் கௌரவிப்பதற்காக வழங்கப்படும் இந்தப் பரிசு உலகப் புகழ் பெற்றதாகும்.

சொல்லாத சேதிகள் என்ற பதினொரு பெண் கவிஞர்களின் கவிதைத் தொகுப்பில் இவரது கவிதைகளும் உள.

தோழி என்ற பெண்கள் சஞ்சிகையின் ஆசிரியராகவும் இருந்தவர்.

யாழ். பல்கலைக்கழக நாடகமும் அரங்கியலும் 2ம் வருட விசேட படிப்பு பட்டதாரி மாணவியான இவர் நாடக நடிகரும், நெறியாளருமாவார்.

கடந்த வருடத்தின் ஓகஸ்ட் மாத இறுதியில் செல்வி புலிகளால் கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டுள்ளமை தெரிந்ததே.

திசையில் வெளியான செல்வியின் கவிதை ஒன்று கீழே :

## இராமனே இராவணனாய்

நான் மிகவும் பலவீனப்பட்டுப் போயுள்ளேன்.
என்னை யாரும் கேள்வி கேட்டுத்
தொந்தரவு செய்யாதீர்கள்
நூலிழையில் தொங்கிக் கொண்டிருக்கிறது எனது இதயம்

எந்த நேரமும்
விழுந்து வெடித்து விடக் கூடும்.

அசோகவனங்கள் அழிந்து போய் விடவில்லை
இந்த வீடே
எனக்கான அசோகவனமாயுள்ளது
ஆனால்
சிறைப்பிடித்தது இராவணனல்ல, இராமனே தான்.

இராமனே இராவணனாய்
தனது அரசிருக்கையின் முதுகுப் புறமாய்
முகமூடிகளை மாற்றிக் கொண்டதை
பார்க்க நேர்ந்த கணங்கள் ...
இதயம் ஒரு முறை அதிர்ந்து நின்றது.

இந்தச் சீதையைச் சிறை மீள வருவது யார் ?

அசோக வனங்கள் அழியாது
இன்னும்
எத்தனை காலத்திற்கு ?

## தனிநாடு...

கொண்டுவர முடியுமென்றால் நாங்கள் அதை அமுல் படுத்துவோம் என்று. Consensus என்றால் என்ன? ஒரு நிலை சம்பந்தமாக எதிர்ப்பில்லாது இருத்தல். இன்று நாம் எல்லோரும் சொல்கிறோம் தெரிவுக்குழுவொன்றுதான் அரசியல் தீர்வைக் கொண்டு வர உள்ள ஒரேயொரு அமைப்பு என்று. ஏனெனில் வெவ்வேறு கோணங்களில் இருந்த யு.என்.பி யும், எஸ்.எல்.எப்.பி யும் கூட இனப்பிரச்சினை பற்றி கதைப்பதற்கு ஒன்றாக இருக்கிற ஒரே ஒரு அமைப்பு தெரிவுக் குழு என்பதால்தான் இது சிறந்தது என ஏற்றுக் கொண்டேன். ஆகையால் இதுதான் கடைசி என்று சொல்லிக் கொண்டிருக்கிறேன். எல்லோரும் அவ்வாறு தான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

தெரிவுக் குழுவில் 45 அங்கத்தவர்கள் இருக்கிறார்கள், 45 என்று வைத்துக் கொண்டாலும் கூட அதில் பெரும்பான்மையானோர் யு.என்.பி. யினர். (23 பேர் யு.என்.பி. யினர், 22 பேர் எதிர்க்கட்சியினர்) அவ்வாறான இடத்தில் இருந்து Consensus ஐ கொண்டுவா என்றால் அது எவ்வாறு சாத்தியம்?. 22 எதிர்க்கட்சியினரும் ஏற்றுக் கொண்டால் யு.என்.பி. யினர் மௌனம் சாதிப்பார்களா? மறுபுறத்தே மற்றவர்கள் என்ன சொல்கிறார்கள் என்று பார்த்துக் கொண்டிருக்கிற எஸ்.எல்.எப்.பி. யும் கூட யு.என்.பி.யினர் ஏற்றுக் கொள்ளும் பட்சத்தில் வட-கிழக்கை இணைப்பை ஏற்றுக் கொள்கிறோம் என்று சொல்வார்களா? இந்த நிலையில் 30, 40 வருட அனுபவமுள்ள அரசியல் வாதியான ஜனாதிபதி அங்கே போய் Consensusஐ

பார்க்க பக்கம் 9

நன்றி - நூலகத்திட்டம்



# தேசிய விடுதலைப் போராட்டம் - ஒரு மீளாய்வு நோக்கி -

சென்ற இதழில் சிதைவிற்கு பின்னரான தமிழ் இளைஞர் பேரவையின் முக்கியத்துவத்தில் தனி நாட்டுக்கான பிரச்சாரங்களை பரவலாக்குவதற்கான நடவடிக்கைகளை எடுத்தமை, அகதிகள் புனர்வாழ்வு நடவடிக்கையில் ஈடுபட்டமை, தமிழ் பிரதேசத்திற்கான சுய பொருளாதார முயற்சியில் அக்கறை செலுத்தியமை என்பனபற்றிப் பார்த்தோம். இவ்விதழில் ஆயுதம் தாங்கிய அமைப்பிற்கு ஊக்கியாக செயற்பட்டமை குடாநாட்டுக்கு வெளியேயான அரசியல் நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தமை பெண்களையும் முழுநேர வேலைகளில் ஈடுபடுத்தியமை என்பனப் பற்றிப் பார்ப்போம்.

## ஆயுதம் தாங்கிய அமைப்பிற்கு ஊக்கியாக செயற்பட்டமை

இலங்கைத் தமிழரின் தேசிய விடுதலைப் போராட்டத்தில் தமிழ் மாணவர் பேரவையின் தோற்றத்துடன் ஆயுதம் தாங்கிய போராட்டம் என்பது அறிமுகமாகத் தொடங்கியது. தமிழ் மாணவர் பேரவையின் முக்கியஸ்தர் கைது செய்யப்பட்டு ஏனையவர்கள் தலைமறைவாகத் தொடங்கியதுடன் ஆயுதம் தாங்கிய போராட்டத்தின் அவசியம் உணரப்பட்டு அதற்கான தயாரிப்புகளும் மேற்கொள்ளப்பட்டன. தமிழ் மாணவர் பேரவையில் இருந்து தலைமறைவானவர்களே இதன் முன்னோடிகளாகத் தொழிற்பட்டனர். தமிழ் தேசிய விடுதலைப் போராட்டதின் முதல் ஆயுதப் போராளியான உரும்பிராய் சிவகுமாரனால் ஆயுத நடவடிக்கை ஆங்காங்கே மேற்கொள்ளப்பட்டாலும் அது ஒரு அமைப்பு வடிவம் பெற்ற ஆயுதம் தாங்கிய அமைப்பின் நடவடிக்கையாக அமையவில்லை. இந்நிலையில் ஆயுதம் தாங்கிய நடவடிக்கைகளுக்கு அமைப்பு வடிவம் கொடுத்து அதனை ஆரம்பித்தவர்கள் 1974ல் உருவாக்கப்பட்ட **புதிய தமிழ்ப் புலிகளேயாவர்.**

இக்காலப்பகுதியில் தமிழ் மாணவர் பேரவையில் அங்கம் வகித்ததற்காக பலர் கைது செய்யப்பட்டு அநுராதபுரம் சிறையில் வைக்கப்பட்டு இருந்தனர். அவர்களில் **பத்மநாதன், செட்டி** இன்னும் இருவரும் சேர்ந்து சிறையில் இருந்து தப்பி ஓடி சிறைக்கு வெளியே இருந்த பிரபாகரனுடன் சேர்ந்து உருவாக்கிய அமைப்பே **புதிய தமிழ் புலிகள்** அமைப்பாகும். இவ் அமைப்பே பின்னர்**1976ல்தமிழீழ விடுதலைப் புலிகள்** எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இதனைப் பற்றி பின்னர் விரிவாகப் பார்ப்போம்.

1976 ல் பெயர் மாற்றத்துடன் தமிழ் ஈழ புலிகள் அமைப்பு வளர்ச்சி பெற்ற போது தமிழ் இளைஞர் பேரவையை சேர்ந்தவர்களும் இவ் அமைப்பினால் கவரப்பட்டனர். 1977 இல் நடைபெற்ற இனக்கலவரத்தின் பின்னர் ஆயுதம் தாங்கிய போராட்டமே இன்றைய அவசியத் தேவை என்பது உணரப்பட்டபோது இவ் அமைப்பின் மீதான கவர்ச்சி மிக அதிகமாக காணப்பட்டது. தமிழ் இளைஞர் பேரவையில் இருந்த பலர் இவ் அமைப்பில் சேர்ந்ததோடு அவ் அமைப்பிற்கு உத்தியோக பூர்வமற்ற வகையில் ஒரு அரசியல் பிரிவாகத் தொழிற்பட்டு ஊழியர்களைத் திரட்டிக் கொடுக்கின்ற ஊடகமாகவும் தொழிற்பட்டனர். (P.L.O.T.) இயக்கச் செயலதிபர் **உமாமகேஸ்வரன், ஊர்மிளா** முன்னாள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டத்தாபன எழுதுவினைஞர் நாகராஜா என்போர் இவ் இளைஞர் பேரவையில் இருந்து விலகி புலிகள் இயக்கத்தில் சேர்ந்து கொண்டனர். இவர்களை விட தமிழ் இளைஞர் பேரவையின் பிரசாரங்களினால் அரசியலுக்கு வந்த புன்னாலைக்கட்டுவன் **சிவகுமார் (இராகவன்) பாலசுப்ரமணிய ஐயர்** என்போரும் புலிகள் இயக்கத்தின் முழுநேர ஊழியர்களாக தொழிற்பட்டனர். ஒருவகையில் இக்காலகட்டத்தில் புலிகள் இயக்கத்தில் சேர்ந்தவர் களில் பெரும்பாலானோர் தமிழ் இளைஞர் பேரவையின் உறுப்பினர்களாக அல்லது அதன் பிரசாரத்தினால் அரசியலுக்கு வந்தவர்களாகக் காணப்பட்டனர்.

## குடா நாட்டுக்கு வெளியேயான அரசியல் வேலைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தமை

இலங்கை அரசின் மொழிப் பாரபட்சம், தரப்படுத்தல் என்பவற்றால் குடா நாட்டு மக்கள் நேரடியாகப் பாதிக்கப் பட்டமையால் தமிழ் தேசிய அரசியல் என்பதும் குடாநாட்டிலிருந்தே ஊற்றெடுத்தது. தேசிய போராட்டத்தில் முன்னணியில் திரண்டவர்களும் குடாநாட்டைச் சேர்ந்தவர்களாகவே அதிகமானோர் காணப்பட்டனர். ஆனால் தேசிய ஒடுக்கு முறையில் பாரிய ஒடுக்குமுறையான நிலச்சூறையாடலுக்கு உட்பட்டவர்கள் குடாநாட்டுக்கு வெளியே எல்லைப்புற தேசங்களில் வாழ்ந்த மக்களேயாவர். இம்மக்களை அரசியல் மயப்படுத்துவது தேசிய போராட்டதில் அவசியமானதொன்றாகக் காணப்பட்டது. "சுவர் இருந்தால் தான் சித்திரம் வரைய முடியும்" அதே போல் எல்லைப்றரம் பாதுகாக்கப் பட்டால் தான் சொந்த நிலத்தில் நின்று போராட முடியும். இதனைத் தமிழ் இளைஞர் பேரவையினர் நன்கு உணர்ந்திருந்தனர். இதனால் குடாநாட்டுக்கு வெளியேயான அரசியல் வேலைகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்து ஈடுபடத் தொடங்கினர். மன்னார், வவுனியா. கிளிநொச்சி, மட்டக்களப்பு, திருகோணமலை, கல்முனை போன்ற இடங்களில் தமிழிளைஞர் பேரவையின் கிளை அமைப்புகளை உருவாக்கியதோடு தனிநாட்டுக்கான பிரசாரங்களிலும் ஈடுபட்டனர். கிளிநொச்சி மாவட்டதில் திருஞானசுந்தரமும், மன்னார் மாவட்டத்தில் ஜெயராஜும், மட்டக்களப்பு மாவட்டத்தில் வாசுதேவாவும், திருகோணமலை மாவட்டதில் சிறிஸ்கந்தராஜாவும், கல்முனையில் பன்னீர்ச் செல்வமும் அமைப்பு வேலைகளை மேற்கொண்டவர்களில் முக்கியமானவர்களாக விளங்கினர்.

தமிழ் இளைஞர் பேரவையின் இம்முயற்சிக்குப் பின்னரே குடாநாட்டுக்கு வெளியேயிருந்தும் தேசிய விடுதலைப் போராட்டத்தில் பங்குபற்றுபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்கியது. இதற்கு முன்னர் 50 களின் பிற்பகுதியிலும் 60களின் ஆரம்பத்திலும் தமிழரசுக்கட்சி நடாத்திய போராட்டங்களில் குடாநாட்டுக்கு வெளியேயான மக்களும் திரளாக பங்குபற்றினாலும் தமிழரசுக்கட்சி போராட்டங்களைக் கைவிட்ட பின்னர் ஒரு தேக்கநிலையே காணப்பட்டது. இத்தேக்க நிலையை உடைப்பதாக இளைஞர் பேரவையின் அரசியல் வேலைகள் அமைந்திருந்தன. எனினும் 1977க்குப் பின்னர் இளைஞர்களைத் திரட்டுவதில் இவர்கள் பல சிக்கல்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது. இச்சிக்கல்களில் பிரதானமாக அமைந்தது பல்கலைக்கழக அனுமதி தொடர்பாக ஐக்கிய தேசிய கட்சி அரசினால் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய அனுமதித் திட்டமாகும். இத்திட்டத்தின்படி பல்கலைக்கழகத்துக்கு மாணவர்களைத் தெரிவு செய்யும் போது மாவட்ட அடிப்படையில் 55%, திறமை அடிப்படையில் 30%, பின்தங்கிய மாவட்ட அடிப்படையில் 15%, என்ற வீதாசாரம் பின்பற்றப்பட்டது. இம்முறையினால் குடா நாட்டைத் தவிர ஏனைய தமிழ் மாவட்ட மாணவர்கள் சலுகைகளைப் பெற்றுக் கொண்டார்கள். இச்சலுகைகள் இருந்தாலும் மொத்தத்தில் இம்முறை தமிழ் மாணவர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதாக இருந்தது. இதனை குடா நாட்டுக்கு வெளியேயான தமிழர்கள் உணரவில்லை. அவர்கள் இவ் அனுமதி முறையினால் கிடைக்கும் சலுகைகளைப் பெற்றுக் கொள்வதற்காக அதன் ஆதரவாளர்களாகவே விளங்கினர். தமிழ் இளைஞர் பேரவையினர் தமது பிரசாரத்தின் பிரதான முழக்கமாக பல்கலைக்கழக அனுமதி முறையை வைத்த போது அதனைக் குடா நாட்டுக்கு வெளியேயான இளைஞர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. இச்சிக்கல் இளைஞர் பேரவைக்கு முன்னணியினரைத் திரட்டிக் கொள்வதில் தடங்கல்களை ஏற்படுத்தியது. எனினும் காலப் போக்கில் உண்மை நிலையை அவர்களுக்குத் தெளிவுபடுத்தி பல்கலைக்கழக அனுமதி முறைக்கப்பால் தமிழ் தேசிய இனம் எதிர்நோக்குகின்ற ஒடுக்கு முறைகளையும் எடுத்துக் காட்டினர். அதிலும் தமிழ் தேசிய இனத்தின் பிரதான ஒடுக்கு முறையான குடியேற்றம் எனப்படும் நிலச்சூறையாடலால் தமிழ்ப் பிரதேசமே பறிபோகின்ற நிலையை விளங்கினர். குடியேற்றம் தொடர்பால் குடா நாட்டுக்கு வெளியேயுள்ள எல்லைப்புற மாவட்டங்கள் பாதிப்படையும் என்பதையும் சுட்டிக் காட்டி போராட்டத்தின் அவசியத்தை வலியுறுத்தினர். இவர்கடைய இடைவிடாத பிரசாரத்தினால் நீண்ட சிரமங்களுக்குப் பின்னரே அவர்களில் கணிசமானவர்களை அமைப்பில் திரட்டிக் கொள்வதில் வெற்றிக்கண்டனர். பல்கலைக் கழக அனுமதிப் பிச்சினையை விட எதிர்காலத்தில் யாழ்பாணத்தவர்களினால் தாம் ஆதிக்கத்திற்குள்ளாக்கப்படுவோம் என்ற அச்சமும் வன்னி, கிழக்கு மக்களிடையே காணப்பட்டது. அதனைப் போக்கும் வகையிலும் அம்மக்களோடு மிகவும் அன்னியோன்யமாக உறவுகளை ஏற்படுத்திக் கொண்டனர்.

## பெண்களையும் முழுநேர வேலையில் ஈடுபடுத்தியமை

தமிழ் விடுதலைப் போராட்டதில் பெண்களை முழுநேரமாக அரசியல் வேலைகளில் முதன்முதலாக ஈடுபடுத்துகின்ற நிலைமையை தமிழ் இளைஞர் பேரவையினரே தோற்றுவித்தனர். இக்காலத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியினரால் அதன் மகளிர் அமைப்பாக தமிழ் மகளிர் பேரவை என்ற அமைப்பு உருவாக்கப்பட்டாலும் அவ் அமைப்பில் திரண்ட பெண்கள் பின்னர் தமிழ் இளைஞர் பேரவையுடனேயே தமது வேலைகளை இணைத்துக் கொண்டனர் .திலகவதி, **ஊர்மிளா, கருணாதேவி, கனகராணி** போன்ற பெண்கள் முழு நேரமாக பணிபுரிந்து பிரசார வேலைகளிலும், தேசிய பொருளாதாரத்தை கட்டியெழுப்புகின்ற வேலைகளிலும் ஈடுபட்டனர். இவர்களின் அரசியல் வேலைகளின் தீவிரம் பற்றி ஏற்கனவே சென்ற இதழிலும் பார்த்திருந்தோம். இளம் பெண்களை விட வயது வந்தவர்களும், குடும்பப் பெண்களும் கூட தீவிரமாக உழைத்ததோடு இளைஞர்களுக்குச் சிறந்த ஊக்கிகளாகவும் தொழிற்பட்டனர். தியாகி சிவகுமாரின் தாயாரான திருமதி பொன்னுத்துரை சங்கானை **அம்மா,** குருநகர் குலமக்கா (வரதராஜ பெருமாளின் மாமியார்) என்போர் இவர்களில் முக்கியமானவர்களாவர். இளைஞர்களுக்கான இருப்பிட வசதிகளை ஒழுங்கு செய்தல், அவர்களுக்கான உணவு ஒழுங்குகளை மேற்கொள்ளுதல் என்பவற்றில் இவர்கள் அதிகளவில் அக்கறை காட்டினர். பிற்காலங்களில் இயக்கங்களை நோக்கித் திரள்திரளாகப் பெண்கள் அணிதிரள்வதற்கு இளைஞர் பேரவையின் நடவடிக்கைகளே முன்னோடியாக இருந்தன.

**அன்னபூரணா**

## விமலேஸ் ...



மக்களை நேசித்த உன்னத போராளியும், யாழ் பல்கலைக் கழக மாணவ தலைவனுமான விமலேஸ்வரன் புலிகளால் கொல்லப் பட்டு நான்கு வருடங்களாகின்றன.

ஈழ தமிழ் தேசிய போராட்டத்தில் விமலேஸ்வரனின் பணி மிக முக்கியத்துவமுடையது. அவற்றில் ஜனநாயக மறுப்பிற்கு எதிராக மக்களை இணைத்த போராட்டம், எல்லைப் பிரதேசங்களை பாதுகாத்தல் மலையக மக்களினையும் அரவணைத்தல், பலதரப்பட்ட கருத்துள்ளோரிடமும் தோழமையை வளர்த்தல் உழைக்கும் வர்க்கத்தின் தலைமையைக் கட்டுதல் என்பன மிக முக்கியமானவையாகும்.

விமலேஸ்வரன் பின்பற்றிய கொள்கைகளில் ஜனநாயக மறுப்பிற்கு எதிர்ப்பு தெரிவிப்பதென்பதே மிகவும் பிரதானமானதாகும். அவன் புலிகளால் கொலை செய்யப் படுவதற்கும் அதுவே காரணமாக அமைந்தது. தான் சார்ந்திருந்த P.L.O.T. அமைப்பின் ஜனநாயக விரோத செயற் பாட்டினை முழுமையாக எதிர்த்து அவ்வமைப்பிலிருந்து விலகியதோடு பல்கலைக்கழகத்தில் புலிகளின் ஜனநாயக மறுப்பிற்கு எதிராகவும் போராடினான் விஜிதரன் கடத்தப்பட்டபோது சாகும்வரை உண்ணாவிரதம் இருந்த அறுவரில் ஒருவனாயிருந்தான்.

தமிழ் தேசிய போராட்டத்தின் ஆயுதத்தில் மட்டும் அவன் நம்பிக்கை வைக்கவில்லை. மக்களே முதலாவது, ஆயுதம் இரண்டாவது என்பதே அவன் கொள்கையாயிருந்தது. எனவே மக்களை அணிதிரட்டி அவர்களை ஆயுதபாணிகளாக்கும்

பார்க்க பக்கம் 8

நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# சரிநிகர்

இல. 6 அலோசாலை கொழும்பு 3. தொலைபேசி : 574047

# சங்கரா சிவசிவா !

கடந்த 28ம் திகதி ஈரோஸ் இயக்கத்தின் முக்கிய பிரமுகரான சங்கர் ராஜீ அவர்கள் வீரகேசரிக்குப் பேட்டியொன்றை அளித்திருந்தார்.

இல-இந்திய ஒப்பந்தத்துடன் ஆயுதங்களைக் கைவிட்டு"ஜனநாயக" வழிக்குத் திரும்பி நாட்டில் "அமைதியையும் சமாதானத்தையும்" ஏற்படுத்த "அரசியலில்" மட்டும் அரசாங்கத்தை ஆதரித்து வரும் அவரிடம் காணப்பட்ட பேட்டியின் போது அவர் வழமையான வாழைப்பழம்+ விளக்கெண்ணெய் = ஈரோஸ் பாணியில் (புரட்டுக: சரிநிகர் இரண்டாவது இதழை) அற்புதமான கருத்துக்களை உதிர்த்திருக்கிறார். அதில் முத்தான மூன்று முத்துக்கள் கீழே :

முதலாவது : "நாம் ஆயுதங்களைக் கைவிட எடுத்த தீர்மானம் சரியானது தானா என்று எண்ணத் தோன்றுகிறது." என்பது

இரண்டாவது : "இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு கிடையாது" என்பது.

மூன்றாவது : "யாருடைய நிர்ப்பந்தமும் இல்லாமல் பாலகுமார் அந்த முடிவை எடுத்திருந்தால் ( அவரது புலிகளுடன் சேரும் முடிவை) எடுத்திருந்தால் அவர் எடுத்த முடிவு சாயானதே." ஆக, நிர்ப்பந்தம் இல்லாமல் பாலகுமார் புலியுடன் சேர்ந்தால் அது சரி, எனவே புலி சரி : புலிகளின் ஆயுதப் போராட்டமும் சரி, ஆனால் அரசியல் ரீதியில் அரசுக்கு ஆதரவு, அப்புறம் இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு இல்லை. அப்படியென்றால் ....

சங்கரா சிவசிவா !
எனக்கு புரியவில்லை.
உங்களுக்காவது ?

# எம். ஜி. ஆர்.
# மொஸாட்
# மோகன்தாஸ்

எம்.ஜீ.ஆர் முதலமைச்சராக இருந்த காலத்தில் தமிழ் நாட்டின் உளவுத்துறைக்குப் பொறுப்பாக இருந்த உயர் அதிகாரி மோகன்தாஸ் இந்தமாத ஆரம்பத்தில் எம்.ஜீ.ஆர் பற்றியும் தன்னுடைய கடந்த காலத்தைப் பற்றியும் ஒரு நூலை வெளியிட்டுள்ளார்.

எம்.ஜீ.ஆர்: மனிதனும் மாயையும் **(M.G.R: The man and the myth)** எனும் தலைப்பில் அமைந்துள்ள இந்த நூலில் எம்.ஜி ஆருக்கும் தமிழ் இயக்கங்களுக்கும் இடையே இருந்த உறவுகள் இந்திய உளவு சேவைகளான றோ, மற்றும் ஐ.பீ (IB) என்பன எப்படி இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினையைக் குழப்பியடித்தன என்று பல விஷயங்களை அம்பலப் படுத்துகிறார்.

தமிழக அரசின் உளவுப் பிரிவிற்குத் தலைமைவகித்த ஆரம்பத்திலிருந்தே பொதுவாக இலங்கைத் தமிழ் மக்களுக்கு எதிராக- குறிப்பாக தமிழ்ப் போராளிகளுக்கு எதிராகவே- செயற்பட்டு வந்த மோகன்தாஸ் எம்.ஜீ ஆரின் வலது கையாக இருந்தவர் என்பது மட்டுமல்லாமல் பல சந்தர்ப்பங்களில் இந்திய மத்திய அரசின் உளவு சேவைகளை மீறியும் செயற்பட்டிருக்கிறார் என்பது இந்த நூலிலிருந்து தெரிய வருகிறது.

யாழ்ப்பாணத்திலிருந்து தமிழ் நாட்டின் கோடிக்கரைக்கு 20 நிமிடங்களில் விரைவுப் படகு மூலம் சென்றுவிடலாம்" என்று சிறு பிள்ளைத்தனமாக எழுதியிருக்கும் மோகன்தாஸ் (பக் 115) போகிற போக்கில் சில முக்கியமான விஷயங்களையும் சொல்லிவிடுகிறார்.



மோகன்தாஸ்

அவருடைய நூலில் தெரிந்தெடுக்கப்பட்ட மொழிபெயர்ப்பு அடுத்த சரிநிகர் இதழில் வெளியாகும்.

மாதிரிக்கு ஒன்று:

"ஓகஸ்ட் மாதம் 2ம் தேதி 1985 ஆம் ஆண்டு சென்னை விமான நிலையத்தில் வெடித்த குண்டினால் முப்பதுபேர் இறந்தனர். இந்தக் குண்டு வெடிப்புக்குக் காரணம் மொஸாட் என்பதாகத் திட்ட முறையில் இந்தியப் பத்திரிகைகளில் செய்திகள் வெளியிடப்படுவதற்கும் இந்திய உளவுச் சேவை ஏற்பாடு செய்தது. தமிழ் போராளிகள் மீது பழி போடுவதற்காக இஸ்ரேலின் உளவு சேவையே, இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளின் பேரில் இந்தக் குண்டு வெடிப்பை நிகழ்த்தியது என்பதே இவ்வாறு புனையப்பட்ட கதைகளினதும் பத்திரிகைச் செய்திகளினதும் சாராம்சம்.

எனினும் என்னுடைய ஆணையின் கீழ் பணிபுரிந்த உளவு அதிகாரிகள் குண்டு வெடிப்புக்கு தமிழ் ஈழ ராணுவம் (TEA) பொறுப்பு என்பதை ஒரு வாரத்தில் கண்டு பிடித்து விட்டார்கள். சம்பந்தப்பட்ட ஆறு பேரும் இனங்காணப் பட்டார்கள்.

அவ்வளவு விரைவில் குற்றவாளிகளை இணங்கண்டமைக்காக எம்.ஜீ.ஆர் என்னைப் பாராட்டினார். எனினும் புதுடில்லியிலிருந்து வந்த அழைப்புகள் நிலைமையை மாற்றின. திடீரென என்னை டெல்லிக்கு அழைத்தார்கள் இந்திய அரசின் உத்தியோக பூர்வமான கொள்கை வகுப்பாளர்கள் இலங்கைத் தமிழ்ப் போராளிகளை பாதுகாப்பது இந்திய அரசின் கடமை என்று எனக்குச் சுற்றிவளைத்துச் சொல்லப்பட்டது. தமிழ் ஈழ ராணுவத்தை சென்னை விமான நிலையக் குண்டு வெடிப்பில் தொடர்பு படுத்தி நான் நடத்தும் விசாரணையை நிறுத்தும் படி என்னைக் கேட்டார்கள். இத்தகைய விசாரணைகள் இந்திய அரசின் நலனைப் பாதிக்கும் என எனக்கு சொல்லப்பட்டது.

எவ்வித பதிலும் சொல்லாமல் தமிழ்நாடு திரும்பிவந்து எம்.ஜி.ஆரிடம் விஷயத்தைச் சொன்னேன். அதற்கிடையில் டெல்லியைச் சேர்ந்த உத்தியோகபூர்வமான தகவல்கள் மூலம் எம்.ஜி.ஆரும் மொஸாட்தான் சென்னை குண்டுவெடிப்புக்கு பொறுப்பு என்று நம்ப ஆரம்பித்துவிட்டிருந்தார்!!

(மீதி அடுத்த இதழில்)

## யாழ்...

பெரிய பச்சைப் பள்ளி, தாந்தான் தோட்டம் ஊடாக புலிகளின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் முன்னேறி ஆனையிறவுடன் தொடர்பை ஏற்படுத்தி உள்ளனர். கொம்படிவெளி, ஊரியான் ஆகிய பாதைகளினூடாக போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. இதனால் யாழ் குடாவுக்கும் ஏனைய இடங்களுக்குமான தொடர்பு முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளது. தற்போது இயக்கச்சியில் நிலைகொண்டுள்ள படையினர் பளையை நோக்கி மேலும் முன்னேறுமுகமாக பலத்த தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றனர்.

### விமான அனர்த்தத்திற்கு யார் காரணம்?

இதனிடையே ஜுலை ஐந்தாம் திகதி மாலை ஐந்து மணியளவில் ஆனையிறவுப் பகுதிக்கு மேலாகப் பறந்து கொண்டிருந்த சீன தயாரிப்பு விமானமான வை-8 வீழ்ந்து நொருங்கியதில் இவ் விமானத்தில் பயணம் செய்த அதிகாரிகள் உட்பட மொத்தம் 13 பேர் பலியானார்கள்.

இவ் விமானத்தை தாமே சுட்டு வீழ்த்தியதாகப் புலிகள் உரிமை கோரியுள்ளதை அரசு மறுத்துள்ள போதும், ''இலக்கற்ற வகையில் வந்த சூடு ஒன்றுகூட விமானத்தைத் துளைத்திருக்கக் கூடும். வெடிமருந்து, ஆயுதங்கள், இராணுவ உபகரணங்கள் ஆகியவற்றை ஏற்றிச் சென்ற விமானம் ஒரு அசல் 'டைம்பொம்' தான். அதனை வெடிக்க வைக்கச் சிறு தாக்கம் ஒன்றே போதும்'' என ஓய்வு பெற்ற விமானப் படைத் தளபதியான வைஸ் மார்ஷல் ஹரி குணதிலக குறிப்பிட்டிருக்கிறார். இது தவிர ஆப்கானிஸ்தானிலிருந்து புலிகள் 'ஸ்ரிஞ்சர்' விமான எதிர்ப்பு ஏவுகணைகளை வாங்க முயற்சி செய்தார்கள் என்கிற ஒரு தகவலும் உண்டு.

### நான்கு அம்சத் திட்டம் சு. கட்சி நிராகரிப்பு

இவை ஒரு புறமிருக்க தமிழர் பிரச்சினைக்கு தீர்வுகாண உருவாக்கப்பட்ட தெரிவுக்குழு அதன் 'இறுதி'க் கட்டத்தை வந்தடைந்துள்ளது. ஏழு தமிழ்க் கட்சிகளால் முன்வைக்கப்பட்ட நான்கு அம்சத் திட்டத்தை யாரும் ஏற்றுக் கொள்வதாயில்லை.

ஜுலை 6ந் திகதி சிறிமாவோ தலைமையில் கூடிய சுதந்திரக் கட்சியின் பாராளுமன்றக் குழு 'வடக்கு-கிழக்கு இணைப்பை சுதந்திரக் கட்சி எதிர்க்கிறது என்றும், அக் கொள்கையை அது ஒருபோதும் கைவிடப் போவதில்லை என்றும், எனவே இந்த நான்கு அம்சத் திட்டத்தை நிராகரிப்பது என்றும் தீர்மானித்துள்ளது.

மறுபுறத்தில் ஜனாதிபதியைச் சந்தித்து இக் கட்சிகள் பேசிய போது 'ஐ.தே.கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் வட-கிழக்கு இணைப்பை எதிர்க்கிறது என்று தெரிவித்துள்ளார். வேண்டுமானால் எல்லோரும் இணக்கத்திற்கு வரும் பட்சத்தில் தான் அதனை நடைமுறைப் படுத்தத் தயாராக இருப்பதாகவும் கூறியுள்ளார்.

ஜனாதிபதியின் இக்கூற்றுத் தொடர்பாக அ.இ. தமிழ் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம் குறிப்பிடும்போது ''வட-கிழக்கை இணைக்க இயலாது என ஜனாதிபதி நேரே சொல்லலாம். அதைவிடுத்து இவ்வாறு கூறுவதனூடாக எங்களை மட்டுமல்ல முழுத் தமிழ் மக்களையுமே முட்டாள்களாக்கப் பார்க்கிறார் எனக் கூறியுள்ளார்.

### கட்டுப்பொத்த முகாம் நிர்மூலம்

இத்னிடையே புலிகள் ஜுலை 11ந் திகதியன்று அதிகாலை 2.30 மணியளவில் அநுராதபுர மாவட்டத்திலுள்ள கட்டுப்பொத்த இராணுவ முகாமைத் தாக்கி நிர்மூலமாக்கி உள்ளனர். சுமார் இரண்டு மணி நேரம் புலிகள் தாக்குதல் நடாத்தியதில் முகாமிலிருந்த ஐம்பதுக்குமேற்பட்ட படையினர் கொல்லப்பட்டனர். பத்திற்குமேற்பட்டோர் காயமடைந்தனர். இருவரைப் புலிகள் கடத்திச் சென்றதோடு முகாமிலிருந்த ரி 55 ரக ஆயுதங்கள் உட்பட வெடிமருந்துகள், கிரனேட்டுக்கள் என்பனவற்றை எடுத்துச் சென்றிருப்பதாகவும் கூறப்பட்டது.

புலிகள் இவ்வாறான நிலைமைகளில் எல்லைப் புற சிங்களக் கிராமங்களின் மீதே தாக்குதலைத் தொடுப்பது வழமை என்றும், அதற்கு மாறாக புலிகள் இந் நடவடிக்கை அரசுக்கு மிகுந்த நெருக்கடியைக் கொடுத்துள்ளது எனவும் கொழும்பின் அரசியல் அவதானிகள் குறிப்பிடுகின்றனர்.

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்கான அரசின் கண்மூடித்தனமான தாக்குதல்களும், ஆளுங்கட்சி, எதிர்க்கட்சியினரின் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான அணுகுமுறைகளும், வளர்ந்துவரும் சிங்களப் பேரினவாதமும், ஜனநாயக வழிக்கு வந்த ஏழு தமிழக் கட்சிகளின் நான்கு அம்சக் கோரிக்கை தொடர்பான தோல்வியும் யாழ்ப்பாணத்தில் புலிகளுக்கும் மக்களுக்குமிடையே ஏற்பட்டு வந்த இடைவெளியை குறைத்து புலிகளை மீண்டும் ஆதிக்கத்திற்குக் கொண்டு வரவே உதவப் போகிறது.

அரசும், சிங்களக் கட்சிகளும் இனப் பிரச்சினைக்கு நியாயமான தீர்வை முன்வைக்காது எடுக்கும் எந்த நடவடிக்கையும், இன்றைய சூழலில் புலிகளுக்கு சாதகமாகவே அமைந்து வரும் என்பது இலகுவாக யாரும் புரிந்து கொள்ளக் கூடிய விடயங்களே.

# நன்றிகள் நன்றிகள் நன்றி


நெருக்கடியான காலகட்டத்தின் மிகச் சிக்கலான நிலைமைகளுக்குள்ளிருந்து சரிநிகர் வெளிவந்து கொண்டிருக்கிறது என்பது உங்கள் எல்லோருக்கும் தெரியும். நேர்மையாகவும், துணிச்சலாகவும் எவ்விதச் சார்புமின்றி கருத்துக்களைச் சொல்வதென்பது பத்திரிகைச் சுதந்திரத்தையும், ஜனநாயகத்தையும் அவரவர் குத்தகைக்கு எடுத்திருக்கும் இந்தக் காலகட்டத்தில் இலகுவானதல்ல.

நமது சகோதரப் பத்திரிகையான "யுக்திய" வின் மீது பொலிஸ் மா அதிபரின் சார்பில் 50 லட்ச ரூபா கோரிமான நஷ்ட வழக்குத் தொடரப் பட்டுள்ளது: உடுகம்பொலவினது அறிக்கையை பிரசுரித்தது தொடர்பாக. அத்த, லக்திவ போன்ற சிங்கள வாராந்தப் பத்திரிகைகளும் அரசின் இவ்வாறான பாய்ச்சலுக்கு இலக்காகியுள்ளன, என்பதும் சில உதாரணங்கள்.

சரிநிகர் இந்தவாறான எல்லா வகையான கருத்துச் சுதந்திர மறுப்புக்கும், ஜனநாயக மறுப்புக்கும் எதிராக தொடர்ந்து குரல் கொடுக்கும். வாசகர்களுடன் கை கோர்த்து நின்று.

இங்கே ஜேர்மனியிலிருந்து மூன்று வாசகர்கள் சரிநிகருக்கு கனொன் AG1 கமெரா ஒன்றினை அன்புடன் அன்பளிப்புச் செய்துள்ளார்கள். அவர்களுக்குச் சரிநிகர் நன்றிகள் என்றென்றும்.

இந்த கமெராவிற்கு ZOOM லென்ஸ் ஒன்றும் இருப்பின் துல்லியமான, சிறந்த படங்களையும் சரிநிகரால் தரமுடியும், பார்ப்போம் எந்த வாசகர்கள் முந்தப் போகிறார்கள் என்று.



திரு. பெ. சந்திரசேகரன்

கடந்த இதழில் மலையக மக்கள் முன்னணியைச் சேர்ந்த திரு. சந்திரசேகரன், திரு. தர்மலிங்கம் ஆகியோரின் படங்கள் இடம் மாறியிருந்தது. தவறுக்கு வருந்துகிறோம். பல வாசகர்கள் சுட்டிக் காட்டி இருந்தார்கள். நன்றி. சரியானபடி படங்கள் இங்கே.



திரு. வீ.ரீ. தர்மலிங்கம்

சரிநிகர் மாத இதழ் இல. 6, அலோ சாலை, கொழும்பு-3, இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கம் (MIRJE) சார்பில்
ச.பாலகிருஷ்ணனால் இரத்மலானை நவமக அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.